Registered as a News paper பக்கங்கள் - 08 விலை - ரூபா 07

# ஈழநாதம்

மட்டக்களப்பு பதிப்பு மக்கள் நாளிதழ்

Eezhanatham

இலவச பிரதி

நாதம் 01 திருவள்ளுவர் ஆண்டு 2035 வைகாசி 27 09. 06. 2004 புதன்கிழமை ஓசை 33




## மட்.பட்டிப்பளையில் தமிழீழ நீதிமன்றம் நாளை முதல் மீண்டும் ஆரம்பம்

(எம்.யுவராஜ்)

தமிழீழ நீதி நிர்வாகத்துறையின் மட்டு. அம்பாறை மாவட்ட தமிழீழ நீதிமன்ற நடவடிக்கைகள் நாளை வியாழக்கிழமை பட்டிப்பளையில் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அண்மையில் மட்டு. அம் பாறை மாவட்டத்தில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையைத் தொடர்ந்து நீதிமன்ற நடவடிக்கைகள் தற்காலிகமாக கைவிடப்பட்டது.

மீண்டும் எமது மக்களின் குடியியல் பிணக்குகளும் குற்றவியல் பிணக்குகளும் தீர்க்கப்பட வேண்டும் என்பதிலும் தமிழீழ தேசத்தில் சட்டமும் ஒழுங்கும் சரியான முறையில் கடைப்பிடிக்கப்பட்டு

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## நாடாளுமன்ற அமர்வு யூலை 20ம் திகதிவரை ஒத்திவைப்பு

(நமது நிருபர்)

பாராளுமன்றம் எதிர்வரும் ஜுலை மாதம் 20 ஆம் திகதி மீண்டும் கூடுமென்று சபாநாயகர் டபிள்யு ஜே.எம்.லொக்கு பண்டார தெரிவித்துள்ளார்.

சபை நடவடிக்கைகள் நேற்று பிற்பகல் ஆரம்பமானபோது சபாநாயகர் இதனை அறிவித்து சபையை ஒத்திவைத்தார். நேற்று காலை சபை கூடியபோது, ஜாதிக ஹெல உறுமயவைச் சேர்ந்த அக்மீமனதயாரத்ன தேரர் பாரா

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

# ஆளும் தரப்பை பதவி கவிழ்க்க எதிர்க்கட்சிகள் புதிய வியூகம்!

## தமிழ் கூட்டமைப்பையும் இணைக்க ஹெல உறுமய முயற்சி

(நமது நிருபர்)

**சகல எதிர்க்கட்சிகளுடனும் உடன்படிக்கை ஒன்றை செய்து கொண்டு அரசாங்கத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்க ஜாதிக ஹெல உறுமயக் கட்சி தீர்மானித்துள்ளது. பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்ட பின்னர் பாராளுமன்றக் கட்டிடத் தொகுதியில் ஹெல உறுமயக் கட் சியினரால் நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனும் இணைந்தா அரசிற்கெதிரான நடவடிக்கைகள் மேற்கொள்ள இருக்கின்றீர்கள் என்று ஊடகவியலாளர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையில், சகல எதிர்க்கட்சிகளுடனும் இணைந்து செயற்படவுள்ளதாக ஹெல உறுமயவின் தம்மாலோக்க தேரர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் அந்த

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## ஏறாவூர் பிரதேசத்தில் காப்புறுதி முகவர்களால் பொதுமக்கள் தொல்லை

(ஐ.எல்.றூமி)

மட்டக்களப்பு மாவட்டத்தின் சில பிரதேசங்களில் காப்புறுதி நிறுவனமொன்றின் முகவர்கள் வர்த்தகர்கள், மற்றும் பொதுமக்களுக்கு பெரும் தொல்லை ஏற்படுத்தி வருவதாக புகார் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக செங்கலடி, வந்தாறுமூலை, வாழைச்சேனை போன்ற பிரதேசங்களில் சமீப நாட்களில் காப்புறுதி நிறுவன முகவர்களது பிரசார நடவடிக்கையினால் வர்த்தகர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

காப்புறுதித் திட்டத்தில்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## நிமலராஜன், நடேசன் நினைவாக வன்னியில் இதழியல் நிறுவனம் திறப்பதற்கு தேசியத் தலைவர் ஆர்வம்

(நமது நிருபர்)

சிரேஷ்ட ஊடகவியலாளர்களான ஜி.நடேசன், ம.நிமலராஜன் போன்றோரின் நினைவாக வன்னியில் இதழியல் கற்கை நிறுவனம் ஒன்று திறக்க வேண்டுமென்று தமிழீழ விடுதலை புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் விரும்புவதாக விடுதலைப் புலிக

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## வாழைச்சேனை பிரதேசத்தில் கசிப்பு உற்பத்தி அதிகரிப்பு!

(முத்துமாதவன்)

வாழைச்சேனைப் பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி அதிகரித்துள்ளதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இச்சட்ட விரோத உற்பத்தி அதிகரிப்பால் குடும்பத்தில் வீண்பிரச்சினைகள், குழுக்களிடையே மோதல்கள் போன்ற சமுதாயச் சீர்கேடான நடவடிக்கைகள் அதிகரித்துக் காணப்படுவதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

அண்மைக்காலமாக இச்சட்ட விரோத நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தவர்களை பொது அமைப்புக்கள், விடுதலைப்புலிகள் எச்சரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## நாடாளுமன்றத்தில் ஆளும், எதிரணி எம்.பிக்களுக்கிடையே கைகலப்பு

### செங்கோல் இன்றி தேரர் சத்தியப் பிரமாணம்

(நமது நிருபர்)

சிறிலங்காவின் நாடாளுமன்றம் நேற்று காலை கூடியபோது



ஹெலஉறுமய பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பதவிப் பிரமாணம் செய்ய முற்பட்ட போது ஏற்பட்ட வாக்குவாதம் முற்றி ஆளும், எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கைகலப்பில் ஈடுபட்டனர்.

இந்த அமளிதுமளியை சபாநாயகரால் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது.

பாராளுமன்றம் நேற்று காலை 10 மணியளவில் சபாநாயகர் டபிள்யு.ஜே.எம்.லொக்கு பண்டார தலைமையில் கூடியபோது சபையில் அமளி-துமளி ஏற்பட்டது.

ஜாதிக ஹெல உறுமய கட்சியின் உறுப்பினர் கதலுவே ரதனசீக தேரரின் இடத்திற்கு பதி

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## இந்திய இலங்கை பாதுகாப்பு உடன்படிக்கை இன்றைய காலத்துக்கு பொருத்தமற்றது

### -செல்வம் அடைக்கலநாதன் எம்.பி.-

(நமது நிருபர்)

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே செய்து கொள்ளப்படவுள்ள பாதுகாப்பு உடன்படிக்கை இன்றைய காலகட்டத்திற்கு பொருத்தமானதல்ல என ரெலோ இயக்கத் தலைவரும், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் கூறியுள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான எந்தவொரு சமிக்ஞையையும் தற்போதைய அரசு வெளிப்படுத்தாத நிலையில், இந்த பாதுகாப்பு உடன்படிக்கை அவசியமற்றதெனவும் அவர் கூறினார். இந்த உடன்படிக்கையின் மூலம் இலங்கை அர

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## மட்.தொழில் நுட்பக் கல்லூரியில் இருமாத வகுப்புக்கள் இல்லை

### மாணவர்கள் பாதிப்பு

(எஸ்.நிலாந்தன்)

மட்டக்களப்பு தொழில் நுட்பக் கல்லூரி பயிற்சி வகுப்புக்கள் கடந்த இரண்டு மாத காலமாக இடை நிறுத்தப்பட்டுள்ளதால் அதில் கல்வி பயிலும் மாணவர்கள் பாதிப்படைந்துள்ளதாக பெற்றோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் இத் தொழில் நுட்பக் கல்லூரியின் செய்து காட்டுனர்களை இடை நிறுத்தியதன் எதிரொலியாக இந்நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## செய்தித் துளிகள்

### விழிப்புணர்வு பயிற்சிப் பட்டறை

(மயூரன்)

வவுனியா மாவட்ட தமிழர்புனர் வாழ்வுக் கழகமும்,டனீஸ் அகதிகள் பேரவையும் இணைந்து நடாத்திய மனித உரிமைகள் சம்பந்தமான விழிப்புணர்வுப் பயிற்சிப்பட்டறை நேற்றுமுன்தினம் காலை 11 மணிக்கு வவுனியா புளியங்குளம் அ.த.க.பாடசாலை மண்டபத்தில் வினாசித்தம்பி தலைமையில் நடை பெற்றது.

இந்நிகழ்வில் டி.ஆர்.சி. நிறுவனம் சார்பில் ஊர்மிளா, விஜிதா, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சார்பில் மு.கணேஸ், மு.புவனநாயகி ,கு.யோகேஸ்வரன் பு.சிவமூர்த்தி ஆகியோரும் 35ற்கும் மேற்பட்ட பொது மக்களும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் அடையாள அட்டை பெறுவது,மரணச் சான்றிதழ்,பிறப்புச் சான்றிதழ், விவாகப்பதிவு போன்றவை பெறுவது சம்பந்தமாக விளக்கமளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### நூல் வெளியீட்டு விழா

(எம்.யுவராஜ்)

நூலாசிரியர் இராசரெத்தினம் தவராஜாவின் ``இலங்கை உலக மெற்றிக் தேசப்பட பயிற்சி``நூல் வெளியீட்டு விழா இன்று புதன் கிழமை மு.ப.10.30 மணிக்கு களுவாஞ்சிக்குடி இராசமாணிக்கம் ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பிரதிக்கல்விப் பணிப்பாளர் திருமதி. ந. புள்ளநாயகம், சிறப்பு அதிதிகளாக மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர் சி.பாஸ்கரன் கிழக்கு பல்கலைக்கழக புவியியல் துறைத்தலைவர் செல்வி .எஸ். பொன்னையா மற்றும் கௌரவ அதிதிகள் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

### மகோற்சவப் பெரு விழா

(எம்.யுவராஜ்)

வவுணதீவு ஸ்ரீபத்திர காளியம்மன் ஆலய வருடாந்த மகோற்சவ பெருவிழா 08ம் திகதி செவ்வாய்க் கிழமை நேற்று அபிஷேக பூசையுடன் ஆரம்பமாகி எதிர்வரும் 11.06. 2004ந் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை தீமிதிப்புடன் நிறைவுறும்.

விழாக்காலங்களில் விசேடபூசைகள்,சொற்பொழிவுகள்,கலைநிகழ்ச்சிகள், பட்டெடுப்பு வைபவம், வீதியுலா என்பன இடம் பெறும்.

### புதிய பாடசாலைக் கட்டடங்கள்

(முத்து மாதவன்)

ஜப்பானிய நிறுவனமொன்றின் நிதியுதவியுடன் கோறளைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள ஆலங்குளம், காயான்கேணி கிராமங்களில் புதிய பாடசாலைக்கட்டிடங்கள் நிறுவப்பட்டு வருகின்றன.

100x20 நீள அகலங்களைக் கொண்டு தற்போது இக்கட்டிடப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### தையல்பயிற்சி நெறி

(முத்து மாதவன்)

வாழைச்சேனை பிரதேசத்தில் கல்வி கற்றுவிட்டு தொழில்வாய்ப்பற்றிருக்கும் யுவதிகளுக்கு தையல் பயிற்சி நெறிகளை சமூக சேவை அமைப்பு நடாத்தி வருகிறது.

இவர்களுக்கு ஊக்குவிப்புப்படியாக ரூ. 850 மாதாந்தம் வழங்கப்பட்டு வருவதாகவும்,பயிற்சி முடிவில் தையல் பயிற்சி டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படுமெனவும், சமூக சேவை அமைப்பின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

### கலந்துரையாடல்!

(எம். யுவராஜ்)

மட்டக்களப்பு மாவட்ட முன் பள்ளி பிரதேச இணைப்பாளர்கள்,வலய இணைப்பாளர்களுக்கான வலுவூட்டல் தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன் தினம் மட்டக்களப்பு தமிழர் புனர்வாழ்வுக் கழக பணிமனையில் ஆரம்பப்பிள்ளைப் பருவ தலைவர், கா.கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்றது. இக்கலந்துரையாடலில் மட்டக்களப்பு மாவட்ட வலய முன்பள்ளி கல்விப் பணிப்பாளர்கள் கலந்து சிறப்பித்தனர்.

# நடேசன் படுகொலையை கண்டித்து திருமலையில் இன்று கதவடைப்பு

(எஸ்.எஸ்.குமார் )

திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவை இன்று புதன்கிழமை (09.06. 2004) திருக்கோணமலை மாவட்டத்தில் பூரண கதவடைப்புக்கு அழைப்பு விடுத்துள்ளது. தலைநகர் வாழ் தமிழ் மக்களே என விழித்து விடுத்திருக்கும் துண்டுப்பிரசுரத்தில், நேற்று நிமலன் இன்று நடேசன் நாளை யார? என குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த துண்டுப்பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

ஊடகவியலாளர் நடேசன், பே ராசிரியர் தம்பையா அவர்களின் படுகொலைகளைக் கண்டித்தும், சமாதானத்தை முன்னெடுப்பதாக கூறிக்கொள்ளும் ஸ்ரீலங்கா அரசின் பாதுகாப்பு படையினரும், தமிழ்த் தேசியத்திற்கு எதிரான தேசவிரோத கும்பலும் ஒன்று சேர்ந்து கிழக்கு மாகாணத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராக நடத்துகின்ற சகல சதிகார நடவடிக்கைகளை கண்டித்தும் ஸ்ரீலங்கா அரசாங்கம் கிழக்கு மாகாணத்தில் மீண்டும் ஒரு அராஜக சூழ்நிலையை அரங்கேற்ற எடுக்கின்ற நடவடிக்கைகளை கண்டித்தும் இன்று புதன் கிழமை பூரண கதவடைப்பு நடாத்தி திருகோணமலை மாவட்ட தமிழ் பேசும் மக்களின் ஒன்றுபட்ட கண்டனத்தை தெரிவிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

அன்றைய தினம் அரச திணைக்களங்கள் தனியார் நிறுவனங்கள் பாடசாலைகள் தனியார் கல்விக் கூடங்கள், போக்குவரத்துக்கள் யாவற்றையும் நிறுத்தி திருக்கோணமலை மாவட்டத்தை ஸ்தம்பிதம் அடையச் செய்வதன் மூலம் எமது எதிர்ப்பினை சர்வதேசத்திற்குத் தெரியப்படுத்துவோம் எனக்கேட்கப்பட்டுள்ளது. எவ்வித வன்செயலிற்கும் இடம் கொடாது சாத்வீகமான முறையில் எமது எதிர்ப்பைத் தெரிவிப்போம். எனத் தெரிவிக்கப்பட்ட துண்டுப் பிரசுரத்தில் முச்சககர வண்டிகளை பூரணமாக நிறுத்துமாறு வேண்டுகின்றோம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தமிழக மீனவர்களுக்கு யாழ் மீனவர்கள் மனிதாபி மான உதவி செய்யத் தீர்மானம்

## படையினரிடமிருக்கும் படகுகளை ஒப்படைக்க முயற்சி

(நமது நிருபர்)

சிறிலங்கா கடற்படையால் அபகரிக்கப்பட்டு, கையகப்படுத்தப்பட்டு ஏலத்தில் விடப்படவுள்ள தமிழக இழுவைப்படகுகளை யாழ்ப்பாண மீனவர்கள் மீட்டு அதற்குரியவர்களிடம் கொடுக்கவுள்ளனர். மனிதாபிமான அடிப்படையில் யாழ்ப்பாண மீனவர்கள் தமிழக மீனவர்களுக்கு இந்த உதவியைச் செய்ய முன்வந்துள்ளனர். அத்துமீறி மீன் பிடித்த போது சிறிலங்கா கடற்படையினரால் அபகரிக்கப்பட்ட தமிழக மீனவர்களின் 54 இழுவைப்படகுகள் சிறிலங்கா அரசினால் கையளிக்கப்படுத்தப்பட்டு யாழ். சிறிலங்கா உயர்நீதிமன்றத்தால் கடற்தொழில் நீரியல் திணைக்களத்திடம் ஏலத்தில் விட தீர்ப்பு வழங்கப்பட்டது. இதன் படி இந்தப் படகுகள் ஏலத்தில் விடப்படவுள்ளன. தமிழக மீனவர்கள் தம்மைப் போல் துன்பமுற்றவர்கள். அவர்களின் தொழில் உடமைகள் பறிமுதல் செய்யப்பட்டதை யாழ். மீனவர்கள் விரும்பவில்லை. அதேவேளை அவர்களின் தொழிலுடமைகள் பறிமுதல் செய்யப்படுவதையும் ஏற்கவில்லை.

இப்படகுகள் காங்கேசன்துறை, காரைநகர், ஊர்காவற்றுறை, சிறிலங்கா கடற்படை இறங்கு துறைகளில் கட்டப்பட்டுள்ளன. எதுவித பராமரிப்புமின்றி தரைதட்டிய நிலையில் உள்ள 54 தமிழக இழுவைப்படகுகளும் சேதமாகியுள்ளன. கடல்நீர் உட்புகுந்து எந்திரம் அளவு நீர் மூடியுள்ளது. அதேவேளை பல லட்சம் ரூபா பெறுமதியான இயந்திரங்கள் துரு வேறியுள்ளன. இவை மீளப்பயன்படுத்த முடி யுமா? என்பதே கேள்வியாக உள்ளது.

கடலிலுள்ள சிலவகை கடற் புழுக்கள் இப்படகுகளின் பலகைகளை சேதமாக்குவதாகவும் - பராமரிப்பு மூலமே தாம் தம்படகுகளை பேணுவதாகவும் யாழ்ப்பாண மீனவர்கள் கூறுகின்றனர். தம்மைப்போல் இவற்றுக்குச் சொந்தமான தமிழக மீனவர்கள் வறுமையில் வாடுகிறார்கள் என்பதை தாம் உணர்வதாக யாழ்ப்பாண மீனவர்கள் கூறுகின்றனர்.

அண்மையில் யாழ்ப்பாண மீனவர் சங்கத்தினர் சிறிலங்காவிற்கான இந்திய தூதரக அதிகாரியான மோகன்குமாரைச் சந்தித்து யாழ்ப்பாணத்தில் கடற்படை துறைகளில் சேதமாகி வரும் தமிழக மீனவகளின் இழுவைப் படகுகளை மீட்டுக் கொடுக்க இராஜதந்திர ரீதியாகச் செயற்பட வேண்டும் என கேட்டனர்.

அதற்கு சிறிலங்கா அரசுச் சட்டம் இடம் கொடுக்காது எனக்கூறி அந்த அதிகாரி முற்றுப்புள்ளி வைத்தார். இந்திய அரசு எத்தகைய அக்கறையை தமிழக மீனவர்கள் மீது வைத்துள்ளது என்பது தெளிவாகத் தெரிந்ததாக யாழ்ப்பாண மீனவர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். இந்நிலையில் யாழ்ப்பாண மீனவர்கள் சங்கங்கள் இப்படகுகளை தாமே மீட்டு கொடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன. இதன்படி இழுவைப்படகுகள் ஏலத்தில் விடப்படுகையில் அவற்றை பிறர் ஏலத்தில் எடுப்பதை தடுத்து சங்கத்தினரே குறைந்த தொகையில் அவற்றை ஏலத்தில் எடுத்து அவற்றை தமிழக மீனவர்களிடம் வழங்க யாழ்ப்பாண மீனவர் சங்கங்கள் ஏற்பாடு செய்கின்றன.

ஏற்கனவே யாழ்ப்பாண சிறைகளிலிருந்த தமிழக மீனவர்கள் விடுவிக்கப்பட பிணைப் பணத்தினை யாழ்ப்பாண மீனவர் சங்கங்களே வழங்கின. அடுத்து அவர்களின் இழுவைப் படகுகளையும் தாமே மீட்டு வழங்கும் மனிதாபிமானப் பணியையும் செய்யப்போகிறார்கள். இது தமிழக தமிழீழ அக மன உணர்வின் வெளிப்பாடாகும்.

# ஜனாதிபதியின் போக்கிலும் முரண்பாடான கருத்துக்கள்

(நமது நிருபர்)

இனப்பிரச்சினைக்கு அனைத்து மக்களின் உரிமைகளையும் பாதுகாக்கும் நிரந்தரத் தீர்வுகாணவே விரும்புகிறேன் என்று ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார். நேற்று முன் தினம் கண்டியில் இடம்பெற்ற நினைவுதினக் கூட்டமொன்றில் சிங்கள மக்களிடையே உரை யாற்றிய ஜனாதிபதி சந்திரிகா, நாட்டில் வாழும் அனைத்து மக்க ளின் உரிமை, ஜனநாயகம், பாதுகாப்பு, எல்லைப்பாதுகாப்பு போன்றவற்றை உறுதி செய்யும் ஓர் நிரந்தரத் தீர்வைக் காண்பதற்கே தற்போதைய அரசு விருப்பமாக உள்ளதாகக் குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகளும் முன்னைய ரணில் அரசும் செய்துகொண்ட போர்நிறுத்த ஒப்பந்தம் தற்காலிகமானது. பேச்சுவார்த்தைகளும் தளம்பலானவை, அதற்கு எந்த வலிமையுமில்லை என்று சாடிய ஜனாதிபதி, இத்தகைய தற்காலிக முடிவுகளைத் தவிர்த்து, விரைவில் சிறிலங்காவில் ஒரு நிரந்தரத் தீர்வைக் கொண்டுவரவே தான் நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.நின்றுபோயுள்ள பேச்சுவார்த்தைகள் பற்றிக் குறிப்பிடுகையில், அனைத்துக் கட்சிகள்,. அனைத்து மக்களின் ஒத்துழைப்புடன், விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடாத்தி, சிறிலங்காவில் நிரந்தர அமைதி தோன்றுவதற்கான புதிய நடவடிக்கைகளைத் தனது அரசு மேற்கொள்ளும் என்றும் தெரிவித்தார்.

# வடக்கு கிழக்கு தமிழ் பாடசாலைகளின் விபுலானந்தர் நினைவு தினம் அனுஷ்டிப்பு

(எஸ்.எஸ்.குமார்)

வடக்கு கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் இ.விசாகலிங்கம் சகல தமிழ் மொழி மூலப்பாடசாலைகளிலும் முத்தமிழ் வித்தகர் விபுலாநந்த அடிகளாரின் நினைவுதினமான ஜுலை 19 அன்று தமிழ் 'தின விழாவை மிகவும் எழுச்சி பூர்வமாக கொண்டாட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என கேட்டுக்கொண்டுள்ளார். இது பற்றிய அறிவித்தலை சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவித்துள்ளார். இவ்விழாவில் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாடசாலை முகப்பில் பதாதை கட்டுதல்.மாவிலை தோரணங்களால் பாடசாலையை அலங்கரித்தல் பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகளை அழைத்தல், தமிழ் மொழியில் தேர்ச்சி பெற்ற அறிஞர்களை விருந்தினர்களாக அழைத்தல். தமிழ்மொழித் தின நிகழ்ச்சிகளை மேடையேற்றுதலும், பாடசாலை மட்டத்தில் சான்றிதழ்களையும் பரிசில்களையும் வழங்குதல்.இவை தொடர்பான அறிக்கைகளை பாடசாலை அதிபர்களிடம் இருந்து பெற்று தனக்கு 30ம் திகதி ஜுலை மாதத்திற்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு அந்த சுற்றறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.



முரண்பாட்டுத் தீர்வை காண்பதில் ஊடகவியலாளர்களின் பங்களிப்பு பற்றி அண்மையில் அம்பாறை ஆரியபொல் விடுதியில் கொழும்பு ஊடகவியலாளர் அமைப்பின் தலைவர் வசந்த சந்திரபால தலைமையில் நடைபெற்ற மூன்று நாள் பயிற்சி பட்டறையின் ஆரம்பவைபவத்தின் போது மூத்த பத்திரிகையாளரான கலாசூரி வி.பி. சிவப்பிரகாசம் மங்கள விளக்கேற்றிவைப்பதையும் பக்கத்தில் வசந்த சந்திரபால களனிப்பல்கலைக் கழக பேராசிரியர் ஜயந்த செனிவரத்தினவை உட்பட பல விரிவுரையாளர்களும் பட்டறையில் கலந்து கொண்ட சிங்கள, முஸ்லிம், தமிழ் ஊடகவியலாளர்களின் ஒரு பகுதியினரையும் காண்க (படம். சரவணன்)

# மட்/ கல்வி வலயத்தில் பதின்மூன்று பாடசாலைகளில் இடைவிலகல் கல்வி

(கர்சனன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் யாவருக்கும் கல்வி புகட்டும் நோக்கில் மட்டக்களப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட பகுதிகளில் பிரசார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன் மட்டக்களப்பு வலயக் கல்விஅலுவலகம் இதற்கான பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

பதினெட்டு வயதிற்குட்பட்டோர் முறையான கல்வியைத் தொடர்தல், பற்றிப் பிடித்தல், தொழில் கல்வி, மற்றும் தொழில் பயிற்சியினையும் பெறமுடியும். இதற்காக மட்டக்களப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட பதின்மூன்று பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

ஏறாவூர் தமிழ் மகா வித்தியாலயம், குடியிருப்பு கலைமகள் வித்தியாலயம், கரடியனாறு மகா வித்தியாலயம், இலுப்படிச்சேனை அ.த.க. பாடசாலை, புல்லுமலை அ.த.க பாடசாலை, கொத்தியாபுலை கலைவாணி வித்தியாலயம், கன்னன்குடா மகாவித்தியாலயம்,மகிழவெட்டுவான் மகா வித்தியாலயம், புதுக்குடியிருப்பு கண்ணகி வித்தியாலயம், ஆரையம்பதி மகா வித்தியாலயம், கிரான்குளம் விநாயகர் வித்தியாலயம், அமிர்தகழி சித்தி விநாயகர் வித்தியாலயம், மகா ஜனக் கல்லூரி ஆகிய பாடசாலைகளே தெரிவு செய்யப்பட்டுள்ளன.

குறித்த பாடசாலை களில் பெயர்களை பதிவுசெய்து கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## நாற்காலிகள் அன்பளிப்பு

(மருதமுனை நிருபர்)

மருதமுனை அல்ஹம்றா வித்தியாலயத்தில் கல்வி கற்று க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்த 13 மாணவர்கள் தலா ஒரு நாற்காலிகள் வீதம் பாடசாலைக்கு அன்பளிப்புச் செய்துள்ளதாக அதிபர் எஸ்.எம்.இப்றாலெவ்வை தெரிவிக்கிறார்.

கற்ற பாடசாலையின் தேவைகளை உணர்ந்து உதவுகின்ற மனப்பக்குவத்தை ஏனைய மாணவர்களும் பின்பற்ற வேண்டும் என நாற்கா லிகள் கையளிப்பு வைபவத்தில் மாணவர்கள் மத்தியில் அதிபர் இப்றாலெவ்வை தெரிவித்தார்.

## அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் புனரமைப்புப் பணிகள் தீவிரம்

(கல்முனை நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸை கட்டியெழுப்பும் வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன் முதற் கட்டமாக சம்மாந்துறை தேர்தல் தொகுதிக்கு உட்பட்ட கிராமங்களில் முஸ்லிம் காங்கிரஸின் மத்திய குழுக்களை அமைக்கும் வேலைத்திட்டம் இந்த வார இறுதிக்குள் முடிவடைந்து விடும் என முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளரும், கிழக்கு மாகாண உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான எம்.ஐ அன்வர் இஸ்மாயில் தெரிவித்தார்.

மு.காங்கிரஸின் உயர்பீட உறுப்பினரான ஐ.எல். அப்துல் அஸீஸ் தலைமையில் சென்ற குழுவினர் ஞாயிற்றுக்கிழமை சம்மாந்துறை மக்கள் பணிமனையில் வைத்து பிரதியமைச்சர் அவர்களை சந்தித்து கட்சி நடவடிக்கை குறித்து கருத்துக் கேட்டபோதே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் பிரதியமைச்சர் கருத்து தெரிவிக்கையில்:- சம்மாந்துறைத்தொகுதிக்கான கட்சி அமைப்பாளர்கள் தெரிவும், மத்திய குழுக்கள் அமைப்பும் முடிவடைந்ததும் பொத்துவில், கல்முனைத் தொகுதிகளுக்கான கட்சி அமைப்பாளர்கள் தெரிவு நடவடிக்கைகளை கட்சியின் உயர்மட்டக்குழு மேற் கொண்டு வருகின்றது என்றார்.

## சிறுவர் இல்லத்திற்கு காணி அன்பளிப்பு

(முத்து மாதவன்)

வாழைச்சேனை விவேகானந்தா சிறுவர் இல்லத்திற்கு நிரந்தர இல்லம் அமைப்பதற்கான 3/4 ஏக்கர் அரச காணித் துண்டு ஒன்றை கோறளைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி.பத்மராஜா வழங்கியுள்ளார்.

கடந்த கால போர் அனர்த்தங்களினால் தாய், தந்தையரை இழந்த 30 பெண் பிள்ளைகள் தங்கிப்படித்துவரும் இச்சிறுவர் இல்லத்தின் பராமரிப்பினை தமிழர் புனர் வாழ்வுக்கழகம் நடத்தி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# சமூக வழிகாட்டி நிறுவனத்தால் எழுத்தறிவுப் பயிற்சிப் பட்டறை

(எஸ். நிலாந்தன்)

மொறட்டுவயில் அவுஸ்ரேலிய சமூக வழிகாட்டி நிறுவனத்தினால் எழுத்தறிவுப்பயிற்சிப் பட்டறை நேற்று நடத்தப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் திருப்பெருந்துறை சமூக அபிவிருத்தி நிறுவனம்,கிராமமக்கள் நிறுவனம், கோறளைப்பற்று வடக்கு அபிவிருத்தி ஒன்றியம் போன்ற நிறுவனங்களின் அங்கத்தவர்களுக்கு இப்பயிற்சி அளிக்கப்பட்டது. எழுதவாசிக்க தெரியாதவர்களின் திறமைகளை வளர்க்கவும் பின் தங்கிய துறைகளை வளர்த்தெடுக்கும் வகையில் விழிப புணர்வை ஏற்படுத்தும் வகையில் இப் பயிற்சிப்பட்டறை நடைபெற்றது.

# செங்கலடி பதுளை வீதி கிராமங்களுக்கு கொய்நோனியா நிறுவனம் உதவி

(கர்சனன்)

செங்கலடி பதுளை வீதியிலுள்ள கிராமங்களுக்கு கொய்நோனியா நிறுவனம் ஒக்ஸ்பாம் நிறுவனத்துடன் இணைந்து அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

தம்பானம்வெளி, காயான்குடா, வேப்பைவெட்டுவான், குசலானமலை, உறுகாமம், கோப்பாய்வெளி ஆகிய கிராமங்களில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

கடந்த இரண்டாயிரம் ஆண்டு முதல் 48 கிணறுகள், 30 மலசலகூடங்கள், 849 குடும்பங்களுக்கு கூரைத் தகடுகள் என்பன வழங்கப்பட்டுள்ளதுடன் சுயதொழிலில் ஈடுபடுபவர்களுக்கு 500 ரூபா தொடக்கம் 1500 ரூபாவரையிலான சுயதொழிலுக்கான கடனுதவிகளும் வழங்கப்பட்டு ள்ளதாக நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.



# நிருவாகிகள் தெரிவு

(முத்துமாதவன்)

மட் கறுவாக்கேணி கிராம அபிவிருத்தி சங்க பொதுக் கூட்டம் சென்ற 05.06.2004ந் திகதி சனிக்கிழமை கறுவாக்கேணி விக்னேஸ்வர வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நிருவாக சபைஉறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் எம்.மகாதேவன், செயலாளர் வி.நவரெத்தினராஜா, பொருளாளர் க.கமலநாதன் மற்றும் 7 பேர் கொண்ட நிருவாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்நிகழ்வில் கிராம அபிவிருத்திச் சங்க அபிவிருத்தி உத்தியோகஸ்தர் வினுராஜ் கிராம சேவையாளர் எஸ்.வசந்தகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதேவேளை கறுவாக்கேணி ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலய பொதுக்கூட்டம் மேற்படி ஆலய வீதியில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் நடப்பாண்டு நிருவாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் ஆ.நல்லையா, செயலாளர் எம்.மகாதேவன், பொருளாளர் ம.ஸ்ரீமுருகன், போசகர்களாக ஆ.பொன்னையா, க.முருகேசு மற்றும் 7 பேர் கொண்ட நிருவாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

# வடக்கு கிழக்கில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய நடவடிக்கை

(நமது நிருபர்)

வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிலவும் தமிழ்மொழி மூல ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வடக்கு கிழக்கு மாகாண ஆளுனர் அசோக் ஜயவர்த்தன ஒப்புதல் வழங்கியுள்ளார்.

ஓய்வுபெற்றஆசிரியர் களை ஒப்பந்த அடிப்படையில்பற்றாக்குறை நிலவும் 8 மாவட்டங்களில் சேவையில் ஈடுபடுத்தவுள்ளதாகவும், 30 சதவீதத்திற்கும் அதிகமான ஆளணி பற்றாக்குறை நிலவும் பாடசாலைகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆசிரியர்கள் நியமனம் செய்யப் படவும் உள்ளனர்.

கடந்த வாரம்ஆளுனருடன் தமிழர்ஆசிரியர்சங்கத்தினர் நடாத்திய சந்திப்பின் போது இந்த இணக்கம் காணப்பட்டதாக தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் மகாசிவம் தெரிவித்தார்.

ஒப்பந்தஅடிப்படையில் கடமை புரிய விரும்பும் ஓய்வுபெற்ற ஆசிரியர்கள்தமது விண்ணப்பங்களை வலயக் கல்விப்பணிப்பாளர் ஊடாக அனுப்பிவைக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

# முதலாமாண்டில் மாணவரை அனுமதிப்பதற்கு யூன் 30க்கு முன் விண்ணப்பிக்க வேண்டும்.

(ஹரிச்சந்திரன்)

அரசாங்கப் பாடசாலைகளில் அடுத்த ஆண்டிற்கான முதலாமாண்டில் மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்களை இம்மாதம் 30ம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. பாடசாலைக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வது தொடர்பாக வெளியிடப்பட்ட கல்வியமைச்சின் சுற்றறிக்கையின் பணிப்புரைக்கமைய மாணவர்கள் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப் படுவார்கள் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

2005ம் ஆண்டு ஜனவரி மாதம் 30ம் திகதி குறைந்த பட்சம் ஐந்து வயதைப் பூர்த்தி செய்யும் பிள்ளைகளின் விண்ணப்பங்கள் அவர்களது நிரந்தர வதிவிடத்திற்கு அண்மையில் உள்ள பாடசாலையின் அதிபர்களுக்கு யூன் மாதம் 30ம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய விதத்தில் பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும்.

நேர்முகப் பரீட்சையின் போது விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு மாணவர்கள் தெரிவு இடம் பெறும். தெரிவு செய்த பாடசாலை அனுமதி மறுக்கப்படும் பட்சத்தில் மாற்றுப் பாடசாலையில் அனுமதி பெறுவதற்காக பிரதேச வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு புதிய விண்ணப்பப் பத்திரமொன்றை அனுப்பி வைக்க வேண்டும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.



முஹம்மது நபி (ஸல்) அவர்களின் பிறந்த தினத்தை (2004.05.02) அண்மையில் மருதமுனை அல் மதீனாதுல் சித்திக்கியா ஊர்வலமாகச் சென்று கொண்டாடிய போது எடுக்கப்பட்ட படம் (படம் தகவல்:- மருதமுனை நிருபர்)

# சவுக்கடி கிராம மக்கள் மின்சார வசதி பெறுவதில் சிரமம்

(எஸ்.நிலாந்தன்)

ஏறாவூர் சவுக்கடி கிராமத்திற்கு நெக்கோட் திட்டத்தின் மூலம் மின்சாரம் வழங்கப்பட்ட போதிலும் பொதுமக்கள் முழுமையாக மின் இணைப்பை பெறமுடியாதுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

சவுக்கடி கிராமத்தில் 263 குடும்பங்கள் வசிக்கின்றன. தற்போது மின் இணைப்பு பொதுமக்கள் குடியிருப்பை அண்டிய பகுதியூடாக வழங்கப்படாது ஒதுக்குப் புறமான இடத்தினூடாக வழங்கப்பட்டுள்ளதால் மின்சார இணைப்பை பெறுவதற்கான எதிர்பார்ப்புடன் இருந்தமக்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

தற்போது ஆறு குடும்பங்கள் மாத்திரமே பெற்றுக்கொள்ள முடிந்ததாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

# செங்கலடியில் சிற்றூர்திச் சாரதியை தாக்கிய இளைஞர் கைது

(கர்சனன்)

செங்கலடியில் தனியார் சிற்றூர்திச் சாரதி ஒருவருக்கும் இளைஞர்கள் சிலருக்குமிடையே ஏற்பட்டவாய்த்தகராறையடுத்து பொலிசார் இளைஞர் ஒருவரை கைது செய்து விசாரணைக்காக அழைத்துச் சென்றனர்.

திங்கட்கிழமை இச்சம்பவம் இடம் பெற்றது.வாகனத்தைச் செலுத்துவதற்கு இடையூறாக நின்ற இளைஞர்களிடம் தனியார் சிற்றூர்தி சாரதி மற்றும் அதில் பயணம் செய்த பொதுமக்களும் வாக்குவாதப்பட்டு இறுதியில் கைகலப்பு ஏற்பட்ட போது பொலிசார் தலையிட்டு நிலைமையை சமரசத்திற்கு கொண்டு வந்ததுடன் இளைஞர் ஒருவரைக் கைது செய்ததுடன் சிற்றூர்தியில் வந்தவர்களையும் விசாரணைக்கு அழைத்துச் சென்றனர்.





# வீட்டு வைத்தியத்தில்

# வெள்ளைப்பூண்டு

பசியைத் தூண்டுவதற்காகவும், ஜீரண சக்தியை அதிகரிப்பதற்காகவும் குழந்தைகளுக்கு வெள்ளைப்பூண்டைச் சுட்டுத் தின்னக் கொடுக்கும் வழக்கம் கிராமப்புறங்களில் காணப்படுகின்றது. வெள்ளைப்பூடு பசியைத் தூண்டி, ஜீரண சக்தியை அதிகரிப்பதுடன் வாயுத் தொல்லைகளையும் கட்டுப்படுத்துகிறது.

வெள்ளைப்பூண்டு இரத்தத்திலுள்ள கொலஸ்ரோலின் அளவைக் கட்டுப்படுத்துவதாக



ஆராய்ச்சிகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனவே இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்த வெள்ளைப்பூண்டு சிறந்த மருந்தாகக் காணப்படுகிறது.

தினமும் வெள்ளைப்பூண்டின் இரண்டு, மூன்று பற்களை பச்சையாக மென்று தின்றால்அது ஜீரணத்தைச் செம்மைப் படுத்துவதுடன் இரத்த அழுத்தத்தையும் அது தொடர்பான அறிகுறிகளையும் கட்டுப்படுத்தும் என்று சித்த மருத்துவம் கூறுகிறது.

வெள்ளைப்பூண்டு மூட்டு வலிகளை நீக்குகிறது. பசியைத் தூண்டி ஜீரணத் திறனை அதிகரிக்கின்றது. உடலுக்கு சுறுசுறுப்பை அளிக்கின்றது. முகவாதத்தைத் தணிக்கின்றது. தலைக்குத்து, காது வலியைத் தடுக்கிறது. வெள்ளைப்பூண்டு விற்றமின் சி குறைபாடுடைய ஸ்கர்வி (Scurvy) நோயைக் குணப்படுத்துகிறது.

வெள்ளைப்பூண்டு நமது பல் எலும்பு ஆகியவற்றின் வளர்ச்சிக்கும் உறுதிக்கும் ஒழுங்காக வேலை செய்வதற்கும் இதயம் சீராகவும், ஒழுங்காகவும் துடிப்பதற்கும் உதவுகிறது.

இழந்து போன தசைகளைச் சரி செய்யும் திறனும் பல் ஈறு எலும்பு ஆகியவற்றின் நலத்தையும் ஆரோக்கியத்தையும் பேணும் திறனும் புண்களை விரைவில் ஆற்றக் கூடியதிறனும் வயிற்றில் ஏற்படும் வாயுக்கோளாறு நீக்கல், அஜீரணத்தால் ஏற்படும் பேதியைக் கட்டுப்படுத்தல் வயிற்றில் வாயுக்களினால் ஏற்படும் இரைச்சல் தோல் தொடர்பான நோய்களையும் கட்டுப்படுத்தும் ஆற்றல் வெள்ளைப்பூண்டுக்கு உண்டு.

**வாசகர் நெஞ்சங்களுக்கு:-**

ஈழநாதம் (மட்டக்களப்புப் பதிப்பு) ஒவ்வொரு வாரமும் புதன்கிழமை "சுகமாய் வாழ்வோம்" எனும் பகுதியை பிரசுரிக்கின்றது. எனவே ஒவ்வொரு வாரமும் நீங்கள் நோய்கள் அவற்றிற்கான தீர்வு வைத்திய ஆலோசனை என்பனவற்றை [illegible]க்கு வினாக்களாக எழுதி அனுப்புங்கள்அவற்றிற்கான பதில்களை வைத்தியத்துறை சார்ந்தோரிடமிருந்து பெற்றுப் பிரசுரிக்கக் காத்திருக்கின்றோம். உங்கள் கேள்விகளை தபாலட்டையில் எழுதி அனுப்பி வையுங்கள் அனுப்ப வேண்டிய முகவரி சுகமாய் வாழ்வோம், ஈழநாதம் (மட்டக்களப்பு பதிப்பு) பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை.

## செங்கலடி மாவட்ட வைத்தியசாலை அதிகாரி டாக்டர் எஸ்.சுகுமார் (எம்.பி.பி.எஸ்) அவர்கள் ஈழநாதம் (மட்டக்களப்பு பதிப்பு) ஊடாக வாசகர் களின் கேள்விகளுக்கு இவ்வாரம் பதிலளிக்கிறார்.



01. **கேள்வி:-** தடிமல் நோய் எவ்வாறு ஏற்படுகிறது அதைத் தடுப்பதற்கான வழி முறை என்ன?

எஸ்.சங்கீர்த்தனா,
களுவாஞ்சிகுடி.

**பதில்:-** வைரஸ், பற்றீரியா போன்ற கிருமிகளினால் இந்நோய் ஏற்படுகிறது.இதைத் தடுப்பதற்கு மக்கள் அதிகமாகக் கூடும் இடங்களில் செல்வதைத் தவிர்த்தல், தூசி, புழுதி போன்ற நேரங்களில் மூக்கை துணியினால் மறைத்தல் போன்ற செயற் பாடுகள் மூலம் இதனைத் தவிர்க்கலாம்.

02. **கேள்வி:-** குக்கல் நோய் எவ்வாறு உருவாகிறது? இதற்கான காரணம் எவை? கட்டுப்படுத்தும் வழிமுறை என்ன?

கே.அமலநாதன்
மட்டக்களப்பு.

**பதில்:-** Bordetella Patussis பற்றீரியாவினால் இந்நோய் ஏற்படுகிறது. இது நோயாளி இருமும் போது மற்றவருக்குப் பரவுகிறது. இதனைக் கட்டுப்படுத்தும் வழி முறையாவது எல்லாக் குழந்தைகளுக்கும் குக்கல் தடுப்பூசி போட வேண்டும்.

03. **கேள்வி:-** வாந்திபேதி நோய்வரக் காரணம் என்ன?

வ.புண்ணியமூர்த்தி
செங்கலடி
மட்டக்களப்பு.



**பதில்:-** BIvrae men எனும் பற்றீரியாவினால் இந்நோய் தொற்றுகிறது. நோயாளியின் மலம் நீருடன் அசுத்தமடையும் போது இந் நீரைப் பருகுவதால் இந்நோய் ஏற்படுகிறது.

இதன் போது நோயாளிக்கு வாந்தியும், மிகத் தீவிரமான வயிற்றுப் போக்கும் காணப்படும் இதனால் நோயாளி மிகவும் வாடிய நிலையில் காணப்படுவார்.

04. **கேள்வி:-** மலேரியாக் காய்ச்சல் எவ்வாறு ஏற்படுகின்றது. இதன் அறிகுறி என்ன?

ப.கமலராணி
வெல்லாவெளி



**பதில்:-** மலேரியா நோய்பிளாஸ்மோடி எனும் கிருமியினால் ஏற்படுகிறது. இக் கிருமியை அனோபிலிஸ்என்ற நுளம்பு பரப்புகிறது.

இதன் அறிகுறியாக

1. நடுக்கத்துடன் காய்ச்சல்
2. காய்ச்சல் ஒன்று விட்டுஒரு நாள் ஏற்படலாம்.
3. நோயினால் பீடிக்கப்பட்டவர் உணர்வு குன்றிய நிலையில் காணப்படுவார்.

# உடல் ஆரோக்கியமாக இருக்க

# வீட்டு வேலைகளில் ஈடுபடுங்கள்



உடல் குண்டாகாமல் ஆரோக்கியமாக இருப்பதற்கு தினமும் வீட்டு வேலைகளில் ஈடுபடுவது சிறந்ததென உலக அளவில் ஆராய்ச்சியாளர்கள் நடாத்திய ஆய்வில் தெரியவந்துள்ளதாக இந்திய மருத்துவ நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

பெருக்குவது, தரையைச் சுத்தம் செய்வது மேசையைத் துடைப்பது உள்ளிட்ட பல வீட்டு வேலைகளில் ஈடுபடுவது சில , பெண்களின் நாளாந்த பணியாகக் காணப்பட்டு வருகின்றது. கணவன் மனைவி இருவரும் வேலைக்குச் செல்லும் இன்றைய காலகட்டத்தில் இந்த நிலையில் மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின.

பல மணி நேரம் ஒரே இடத்தில் அமர்ந்து வேலை செய்வது , உடலுக்குப் பயிற்சியே இல்லாத வேலைகளில் .டுபடுவது இதன் காரணமாக நோய்களின் பாதிப்பு அதிகரித்து வருகின்றது. ஆனால் தினமும் 30 நிமிடமாவது வீட்டு வேலை செய்வது தோட்டத்தைச் சீரமைப்பது போன்றவற்றில் கவனம் செலுத்துவதால் உடல் பருமன் குறைவதோடு மன அழுத்தம், உள்ளிட்டபல நோய்களிலிருந்து விடுபட முடியும்.

*சசி*

# குழந்தைகளைப் பாதிக்கும் இதயநோய்

குழந்தைகளைப் பாதிக்கும் பல நோய்களில் இதயம் சம்பந்தமான நோய்கள் முக்கியாமனதாகும். உங்கள் குழந்தைக்கு இதய நோய் இருக்கிறதா என்பதை அறிந்து கொள்ள பின்வரும் குறிப்புக்கள் உங்களுக்கு உதவியாய் இருக்கும்.

நூற்றில் ஒரு குழந்தை இதய



நோயுடன் பிறக்கிறது. நாக்கு, உதடு, நகங்கள், விரல்களில் நீலம் படிந்திருப்பது ஒரு முக்கியமான அறிகுறியாகும். அதே சமயம் குழந்தை அழும் பொழுது வாய், விரல்,கைகள் போன்றவை நீலம் பாலித்திருப்பது இயல்பானவை.

குழந்தைகள் அதிவேகமாக மூச்சு விடுவது (நிமிடத்திற்கு 50க்கும் அதிகமாக) அச்சமயத்தில் விலா, மற்றும் வயிற்றுப்பகுதி, தசை , உள்வால்புகள் இதயத்தில் ஓட்டை இருப்பதன் அறிகுறியாக இருக்கலாம். தற்காலிகமாக எப்போதாவது மூச்சிரைப்பது சாதாரண விசயம்தான் ஆனால் நாட்கணக்கில் நீடித்தால் வைத்தியரை நாடவும்.

உங்கள் கைகளை குழந்தையின் மார்பின் மீதுவைத்துப் பார்க்கும் போது முழு மார்பும் உங்கள் கைகள் மீது படபடப்பதைப் போன்று உணர்ந்தால் முன்னெச்சரிக்கையாக மருத்துவரின் ஆலோசனையைக் கேளுங்கள். வியர்வையும் இதய நோயின் ஒரு அறிகுறியாகும் பொதுவாக எல்லாக் குழந்தைகளுக்கும் வியர்க்கும். சாப்பிடும் போது வியர்த்தல், வேகமாக மூச்சு வாங்குதல்,படபடக்கும் இதயம், போன்ற அறிகுறிகள் இதய நோயாகஇருக்க வாய்ப்புண்டு இயல்பாக குழந்தைகள் அடிக்கடி சாப்பிட விரும்பாது. ஆனால் இதயநோயுள்ள குழந்தைகள் எப்போதும் பசியுடனிருக்கும். எளிதாக இவை சோர்வடைந்து விடுவதோடு உணவ ருந்தும் போது சுவாசத்திற்காக சற்று இடை வெளிவிடும் ஒரே நேரத்தில் சாப்பிடவும் மூச்சு விடவும் இவர்களுக்கு சிரமமாய் இருக்கும் இத்தகைய குழந்தைகளுக்கு இதய நோய் இருக்க அதிக வாய்ப்புண்டு.

எளிய உடற்பயிற்சி விளையாட்டுக்களுக்கே மற்றைய குழந்தைகளை விட அதிகமாக மூச்சு வாங்கும். குழந்தைகளுக்கு இதயநோய் இருக்கலாம் இத்தகைய குழந்தைகளால் உழைப்புச்சார்ந்த பாரமான வேலைகள் செய்யமுடியாது.

உடல்பருமனும் இதயநோயின் அறிகுறியாய் இருக்கலாம் இவர்கள் விளையாடும் போதுஎளிதில் களைத்துவிடுவார்கள். ஒரு வேளை இரத்தச்சோகையும் காரணமாக இருக்கலாம். எனினும் இரத்தச் சோகையா?





குருதி நோயா? என்பதை மருத்துவர் மூலம் அறிவதே நல்லது.

இதய வலி சிறுவர்களுக்கு அந்நியமானது குழந்தை நெஞ்சு வலிப்பதாகக் கூறினாலோ மூச்சு வாங்கினாலோ மருத்துவரின் ஆலோசனையைப் பெறலாம்.

சில குழந்தைகளுக்கு ஆஸ்துமா இருக்கலாம் சமயங்களில் கூடவே இதயம் சார்ந்த பிரச்சினைகளும்இருக்கலாம். பரிசோதனை அவசியம்.

கால் வலியால் சில குழந்தைகள் தோன்றும் இப்பிரச்சினை கல்சியம் குறைவாலோ எலக்ட்ரோலைட் பற்றாக்குறையாகவோ குழந்தை வளர்வதால் ஏற்படும் இயல்பான வலியாகவோ இருக்கலாம். உடற்பயிற்சியின் போதுகால்வலி இருந்தால் வென்ட்ரிக்கிளில் இருந்து செல்லும் தமனியின் பாதை குறுகுவதால் ஏற்படும் பிரச்சினையாக இருக்கலாம்.

மருத்துவர் உங்கள் குழந்தையின் ரத்த அழுத்தத்தை சோதிக்கும் போது வலது கையில் மட்டம் அதிகமாக இருந்தால்அதுவும் பிரச்சினையாக இருக்கலாம். சில தலைவலியும் மேற்கண்ட பிரச்சினையுடன் தொடர்புடையது.

பழங்கள் காய்கறிகள் தானியங்கள் அரிசி, தயிர், கோழி இறைச்சி, மீன் பருப்பு வகைகள் ஆகியவை இதயத்துக்கு ஆரோக்கியமான உணவுகள் ஆகும்.

# காவிரி நீர் திறந்து விடுவது பற்றி தமிழக குழுவின் சந்திப்பிற்கு பின் தீர்மானம்

(சென்னை 08)

காவிரியில் தண்ணீர் திறக்கப்படுமா?. தமிழககுழுவை சந்தித்த பின் கர்நாடக அரசு முடிவு செய்யும் என்று கர்நாடக முதல்வர்



தரம் சிங்அறிவித்துள்ளார். காவிரியில் கர்நாடகம் தண்ணீர் திறந்து விடாததால் தஞ்சையில் இந்த ஆண்டும் நெற்பயிர் சாகுபடி செய்ய முடியாத நிலை உள்ளது அல்லவா, வழக்கமாக ஜுன் 14-திகதி திறக்கப்பட வேண்டிய மேட்டூர்அணை இந்த ஆண்டும் அந்த திகதியில் திறக்கப்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டு விட்டது. இந்த நிலையில் ஜன நாயக முற்போக்கு கூட்டணி தலை வர்கள் கூட்டம் சென்னையில் தி.மு. கழக தலைவர் கருணாநிதி தலை மையில் நடந்தது.

அதில் காவிரியில் தண்ணீர் திறந்து விடும்படி வற்புறுத்த முன்னாள் அமைச்சர் துரைமுருகன் தலைமையில் ஜி.கே.வாசன், ஜி.கே. மணி, எல்.கணேசன், டி.கெ.ரங்கராஜன், ஆர்.நல்லக்கண்ணு காதர் மொகைதீன் ஆகிய தலைவர்கள் அடங்கிய குழு 10-திகதி கர்நாடகம் சென்று கர்நாடக முதல்வர் தரம்சிங்கை சந்திப்பது என்று முடிவு செய்யப்பட்டது. இந்த நிலையில் காவிரி நீர் பிரச்சினை தொடர்பாக கர்நாடக முதல்வர் தரம்சிங் தலைமையில் உயர்மட்ட கூட்டம் தலைநகர் பெங்களூரில் நேற்று முன்தினம் நடந்தது. துணை முதல்வர் சித்தராமையா, அமைச்சர் பி.ஜி. ஆர். சிந்தியா மற்றும் நீர்ப் பாசனத்துறை உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர். கர்நாடகத்தின் 4 அணைகளில் உள்ள நீர் இருப்பு நிலவரம் பற்றி கூட்டத்தில் விவாதி க்கப்பட்டது. காவிரி நீர் பிரச்சினைக்கு தீர்வுகாண காவிரி ஆணைக் கூட்டத்தை கூட்ட வேண்டும் என்று தமிழகம் கோரி இருப்பதால் அந்த கூட்டத்தில் முடிவு எதுவும் எடுக்க ப்படவில்லை.

கூட்டம் முடிந்து வெளியே வந்த முதல்வர் தரம்சிங் கூறியதாவது தமிழக தூதுக்குழுவினர் வருகிற 10-ம் திகதி என்னை வந்து சந்தி ப்பதாக கூறி இருக்கிறார்கள். எனவே அந்த குழுவினர் என்னை வந்து சந்தித்த பிறகுதான் காவிரியில் தண் ணர் திறந்துவிடுவது உட்பட எதிர் கால நடவடிக்கை பற்றி முடிவு எடுக்க முடியும் அதே சமயம் காவிரி படுகையில் உள்ள கர்நாடக விவசாயிகளின் நலன் பாதிக்க ப்படாமல் அரசு பார்த்துக்கொள்ளும். இவ்வாறு கூறினார்.

# தமிழகத்தில் வாக்காளர் அட்டைகளை குளறுபடி செய்தோர் மீது நடவடிக்கை

(சென்னை 08)

வாக்காளர் பட்டியல் குளறுபடி தொடர்பாக 2 மாதத்தில் விசாரணை முடித்து அதிகாரிகள் தவறு செய்து இருந்தால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தலைமை தேர்தல் ஆணையர் கிருஸ்ணமூர்த்தி கூறினார். மதுரையில் தலைமை தேர்தல் ஆணையர் கிருஸ்ணமூர்த்தி நேற்று முன்தினம் (திங்கள்) மதியம் விமானம் மூலம் மதுரை வந்தார். விமான நிலையத்தில் அவர் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியலில் அதிக அளவில் பெயர் நீக்கப்பட்டு குளறுபடி நடைபெற்று இருப்பது குறித்து நிருபர்கள் கேட்டனர். இதற்கு பதிலளித்த தலைமை தேர்தல் ஆணை யர் கூறி யதாவது. தமிழ் நாட்டில் வாக்காளர் பட்டியலில் பெயர் நீக்கம் மற்றும் குளறுபடி தொடர்பாக தேர்தல் ஆணையம் விசாரணைக்கு உத்தர விட்டுள்ளது. இந்த விசாரணை நல்ல முறையில் நடைபெறும். 2 மாதத்தில் விசாரணை முடி வடை யும். இதில் அதிகாரிகள் தவறு இருந்தால் அந்த அதிகாரிகள் மீது கடும் நடிவடிக்கை எடுக்கப்படும்.



# அந்தரத்தில் அபிநயம்

(ராய்டர்)

உக்ரைன் நாட்டின் கெய்வ் நகரில் ஐரோப்பிய ஜிம்னாஸ்டிக் சாம்பியன்ஷிப் போட்டிகள் நடைபெற்றன. இதில் ஐரோப்பா முழுவதும் இருந்து பல்வேறு நாடுகளைச் சேர்ந்த வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர். போட்டியில் உக்ரைன் நாட்டு மங்கை அன்னா பேர்னோவா தனது திறமையை காட்டினாா.

# உலக செய்திகள்

## தொட்டாற் சிணுங்கி துள்ளிக் குதூகலம்

(ராய்டர்)

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் 58-வது டோனி விருது விழா நடைபெற்றது. இதில் ஹொலிவூட் நட்சத்திரங்கள் அனைவரும் கலந்து கொண்டனர். இந்த விருதுக்கு ஞக் ஜாக்மேன் என்ற பொப்பா டகர் பெயர் பரிந்துரை செ ய்யப்பட்டுள்ளது. திங்கள் நடைபெற்றது. விழாவில் அவரது இசை நிகழ்ச்சி இடம் பெற்றது. அப்பொது பிரபல ஹொலிவுட் நடிகை சாரா ஜெசிகா பார்க்கரும் அவருடன் சேர்ந்து ஆடி னார். பாடகர் தொட்டதும் அவர் செயற்கையாக தொட்டாற் சிணுங்கி போல் சிணுங்கினார்.



# இந்திய மக்களை அச்சுறுத்திய பொடாச் சட்டம் ரத்து

(சென்னை 08)

இந்தியா முழுவதிலும் அமுலில் இருந்தாலும், தமிழ்நாட்டில் மிக அதிகமாகத் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு வந்த பொடாச் சட்டம் ரத்து செய்யப்படுவதாக ஜனாதிபதி அப்துல் கலாம் நாடாளு மன்றத்தின் கூட்டுக் கூட்டத்தில் அறிவித்தார். அதேபோன்று புதிய அரசின் இன்னுமொரு கொள்கையான தமிழ்மொழிக்கு செம்மொழி அந்தஸ்து வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளதென்று ஜனாதிபதி அப்துல் கலாம் தெரிவித்தார்.



நாட்டில் பாவனையிலுள்ள தேசிய மொழிகள் அனைத்தையும் அரசின் ஆட்சி மொழிகளாக்குவது குறித்து ஆராய ஓர் உயர்மட்டக் குழுவை அமைக்கவுள்ளதாகவும் ஜனாதிபதி மேலும் அறிவித்தார்.16 பக்கங்கள் கொண்ட அந்த உரையில் ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் குறைந்தபட்ச பொதுச் செயல் திட்டத்தில் கூறப்பட்டு இருந்த அனைத்து திட்டங்களும் இடம் பெற்று இருந்தன.

ஜனாதிபதி உரையின் முக்கிய அம்சங்கள் வருமாறு சென்னை போன்ற நகரங்களிலும் காணப்படும் குடிநீர் பற்றாக்குறையைப் போக்குவதற்காக கடல்நீரை குள நீராக்கும் திட்டங்கள் உட்பட திறம் மிக்க திட்டங்கள் கொண்டு வரப்படும். பொடா சட்டம் ரத்துச் செய்யப்படும். தீவிர வாதத்தை ஒழிக்க ஏற்கனவே உள்ள சட்டங்களே போதுமானது.

தமிழ் செம்மொழியாக அறிவிக்கப்படும். 8-வது அட்டவணையில் உள்ள அனைத்து இந்திய மொழிகளையும் ஆட்சி மொழியாக்குவது பற்றி பரிசீலிக்க ஒரு கமிட்டி அமைக்கப்படும்.. காவிரி நீர் பிரச்சினையில் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரும் பாதிக்கப்படாத வகையில் சுமுக தீர்வுகாணப்படும். நதிகளை இணைக்கும் மாபெரும் திட்டத்துக்கான தொழில்நுட்ப பொருளாதார சாத்தியக் கூறுகள் கவனமாக ஆராயப்படும்.

லாபம் ஈட்டும் பொதுத்துறை நிறுவனங்களுக்கு தன்னாட்சி வழங்கப்படும். நஷ்டத்தில் நடக்கும் பொதுத்துறை நிறுவனங்கள் மூடப்படும் அல்லது தனியாருக்கு விற்கப்படும். குஜராத்தில் நடந்தது போன்ற வகுப்புவாத வன்முறைகளை தடுக்க ஒரு முன்மாதிரிச் சட்டம் இயற்றப்படும். தொழில் வர்த்தக நிறுவனங்களுடன் கலந்து ஆலோசித்து மதிப்பு கூட்டு வரி அமுல்படுத்தப்படும். நாட்டின் மதச்சார்பற்ற தலைமையை பேணி, பாதுகாத்து வளர்க்க இந்த அரசு உறுதி பூண்டு உள்ளது. நாட்டின் சமூக ஒற்று மையை சீர்குலைக்க முயற்சிக்கும் அடிப்படைவாதத் தடுப்பு சக்திகள் அச்சமின்றி ஒடுக்கப்படும். நாட்டின் வளர்ச்சி விகிதம் 7 முதல் 8 சதவீதத்தை அடைய முயற்சி மேற்கொள்ளப்படும். விவசா யிகள், விவசாய தொழிலாளர்கள், விவசாய கூலிகளின் வருமானத்தை பெருக்க வழி வகை செய்யப்படும்.. என அந்தப் பதினாறு பக்க அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பொடாச் சட்டம் ரத்தானாலும், தீவிரவாதத்தி ற்கெதிரான நடவடிக்கைகளில் எந்தத் தொய்வும் இருக்காது என்று குறிப்பிட்டார். பொடாச் சட்டம் ரத்தா வதாக அறிவித்த போது, அ.தி.மு.க. மற்றும் பா.ஜ.க. தவிர்ந்த ஏனைய அனைத்துக் கட்சி அங்கத்தவர்களும் மிகவும் மகிழ்ச்சிப் பிரவாகம் செய்து, மேசைகளில் தட்டி, கைதட்டி ஆரவாரத்துடன் தங்கள் திருப்தியை வெளியிட்டார்கள்.

# ஜேம்ஸ் பாண்ட் நடிகர் பியர்ஸ்

(ராய்டர்)

ஜேம்ஸ்பாண்ட் படங்களில் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் ஒவ்வொருவர் ஜேம்ஸ்பாண்டாக நடித்து வருகின்றனர். தற்போதைய ஜேம்ஸ்பாண்ட் நடிகர் பியர்ஸ் பிராஸ்னன். அவருக்கு உலகம் முழுவதும் கோடிக்கணக்கான ரசிகர்கள் உள்ளனர்.

சமீபத்தில் இங்கிலாந்து நாட்டில் திமிங்கிலங்களின் பாதுகாப்பி ற்காக விசேட கப்பல் ஒன்று கடலில் தனது பயணத்தை தொடங்கியது. திமங்கிலங்கள் குறித்து ஆராய்ச்சியிலும், திமிங்கிலங்கள் சட்ட விரோதமாக வேட்டையாடப்படுவதை தடுக்கும் பணியில் இந்த கப்பல் ஈடுபடும். அதன் தொடக்க விழாவில் ஜேம்ஸ் பாண்ட் நடிகர் பியர்ஸ் பிரா ன்சன் தனது மனைவி கெல்லியு டன் கலந்து கொண்டார். அவர்கள் இருவரும கைகோர்த்தபடி வருவதைப் படத்தில் காணலாம். நடிகர் பியர்ஸ் பிரான்சனைவிட அவரது மனைவிக்கு தான் ரசிகர்கள் அதிகம் போலும். வழிநெடுக அவர் கையசைத்துக் கொண்டே வருகிறார்.



# அமெரிக்க விமான சேவை மீது தாக்குதல் நடத்தப்படும்

## அல்குவைதா அமைப்பு எச்சரிக்கை

(ராய்டர்)

அமெரிக்கா மற்றும் மேலைத்தேய நாடுகளினால் நடத்தப்படும் விமான சேவைகளின் மீது தாக்குதல் நடத்தப்படும் என சவூதியரேபியாவில் உள்ள அல் குவைதா அமைப்பினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இந்த எச்சரிக்கை காரணமாக சவூதியரேபியா பாரிய நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளது. அண்மையில் இடம் பெற்றதாக்குதல் சம்பவங்களினால் சவூதியரேபியாவில் பதற்றம் நிலவி வருகின்றது.

அனைத்து வகையான போக்குவரத்து மார்க்கங்கள் மீதும் தாக்குதல் நடத்தத் தாம் திட்டமிட்டுள்ளதாகவும் அமெரிக்க மற்றும் மேலைத்தேய நாடுகளினால் நடத்தப்படும் விமான சேவைகளே தமது பிரதான இலக்கு எனவும் அவர்கள் எச்சரித்துள்ளனர். இதே வேளை முஸ்லிம் மக்களை மேலைத்தேய மக்கள் வாழுகின்ற பிரதேசங்களிலிருந்து விலகியிருக்குமாறு அல்குவைதா அமைப்பைச் சேர்ந்த இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டு உள்ளது.

# வாழைச்சேனை காகித ஆலை மூடப்படும் அபாய நிலை!

மறைந்த அரசியல் தலைவர்களான திரு.ஜி.ஜி. பொன்னம்பலம், நல்லையா ஆகியோரின் பெருமுயற்சிகாரணமாக உருவான கைத்தொழில் பேட்டையான வாழைச்சேனை கடதாசி ஆலை 50 ஆண்டுகளுக்கு மேலான வரலாறு கொண்டது. கிழக்கிலங்கையின் பெருமைக்கு ஓர் எடுத்துக்காட்டு.

கிட்டத்தட்ட இதுவரை 3700க்கும் மேற்பட்ட நிரந்தர ஊழியர்களை உள்ளடக்கத்தில் கொண்டது. மாத்திரமன்றி, மறைமுகமாக 3000 க்கும் மேற்பட்ட குடும்பங்களின் ஜீவனோபாயத்திற்கும் வழிகாட்டிக் கொண்டிருந்தது. அத்துடன் 1400க்கும் 1800க்கும் இடைப்பட்ட நிரந்தர ஊழியர்களை நீண்ட காலத்திற்கு தன்னகத்தே கொண்டிருந்தது. மாத்திரமன்றி பொறியியல் பட்டதாரிகளையும், விஞ்ஞான பட்டதாரிகளையும், கணக்காளர்களையும் தன்னுள் அடக்கி நாட்டில் பட்டதாரிகளின் வேலையில்லாப் பிரச்சினைகளைப் போக்கும் ஒரு சாதனமாக அமைந்தது என்றால் மிகையன்று. தொழில்சார் தகைமைகளுக்காக பலர், புலமைப்பரிசில் ஊடாக வெளிநாடு சென்று வருடக்கணக்கில் பயிற்சி பெறவைத்ததும், தற்போது கலங்கி நிற்கும் இக்காகித ஆலைதான்.

இக்காகிதஆலைக்குச் செல்லமாக ஒரு பெயர் இருந்தது. அதுதான் காசாலை. கர்ணன், பாரி போன்ற வள்ளல்கள் வாரி, வாரிக் கொடுத்தனர். எனப் படித்திருந்தாலும், நேரடியாக அவர்களை இக்காகி தாலை ஊடாகத் தான் காண முடிந்தது.

இங்கு பணி புரிந்த மூவின மக்களும் நெருக்கமான உறவுகளுடன் நீண்ட காலம் கூடி வாழ்ந்தனர். பணி புரிய வந்த சிங்கள மக்கள் திரும்பச் செல்லும் போது தமிழர்களைப் போன்று, தமிழ் பேசி மகிழ்வுடன் பிரிந்து சென்ற போதெல்லாம் இன உணர்வுகளின் உயர்வை, உணரக்கூடியதாகவிருந்தது.

இப்படிப்பல சாதனைகளைப்படைத்து பெருமையில் தலைநிமிர்ந்து நின்ற இக்காகித ஆலை இன்று தலைகுனிந்து கொட்டும் கண்ணீருக்கு யார் கார ணம்? இருக்கும்வரை இருந்து விட்டும் போகட்டும் நமக்குக் கிடை த்தால் சரி என்ற அடிப்படையில் ஆண்டவர்கள் எண்ணியமையால்தான் இந்த அவல நிலை ஏற்பட்டது.

மனிதனால் உருவாக்கப்பட்ட அத்தனைக்கும் ஒரு ஆயுட்காலம் உண்டு. அந்த உருவாக்கங்களை காலத்திற்குக் காலம் செம்மையான பராமரிப்புக்கு உட்படுத்தி எதிர்கால நன்மைகளை மனதில் கருதி இருந்தால், இன்று கலங்கி நிற்கும் காகிதஆலை, காலத்தால் மறக்க இயலா காசாலையாக நிமிர்ந்து நின்றிருக்கும்

காகிதம் மனிதருக்கு அத்தியாவசியமில்லையெனினும், அவசியமானது என்பதை மறுப்பதற்கில்லை. இலங்கையின் காகிதத்தேவையின் 40 சதவீதமான உற்பத்தியை காகித ஆலைகள் மூலமாகப் பெற முடிந்தது. ஆனால் தற்போது 4 சதவீதமான தேவையைக்கூட பூர்த்தி செய்ய முடியாத அவல நிலைக்குத்தள்ளப்பட்டு விட்டது.

இதற்கெல்லாம் யார் காரணம் அரசியல்வாதிகள், ஆட்சியாளர்கள், தூரநோக்கற்ற நிர்வாகத்தினர், ஆகியோரே வெளிநாட்டுக்கடதாசி வகைகளை, இறக்குமதி செய்யும் உரிமையை ஆட்சியாளர்கள் அல்லது அரசியல் வாதிகளின் செல்வாக்கு மிக்கவர்கள் பெற்று, காகித ஆலைக்குச் சாவு மணி அடிக்கத்தொடங்கினர்.

அரசியல் வாதிகளோடு கைகோர்த்து பதவி உயர்வுகளுக்காக இங்கு பல தொழில் சங்கங்கள் உருவாக்கப்பட்டன. ஊழியர்களின் உயர்வுக்காகப் போராடுகிறோம் என்ற உயரிய தத்துவத்தின் மகத்துவத்தை கொச்சைப்படுத்தி முடிவில் பதவி உயர்வோடு சங்கமிக்கும் ஆற்றல் மிகு தொழில்சங்க வாதிகளும் இக்காகித ஆலையில்தான் உருவாக்கப்பட்டார்கள். தொழில்சங்கங்களின் இத்தகைய செயல்களினால் நிர்வாகம் சீர்கு லைந்தது.

ஏதோ காலத்துக்குக் காலம் தொழில் சங்கங்களினாலும், பொது அமைப்புக்களினாலும் மந்திரிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல்வாதிகள், கூட்டுத்தாபன உயர்நிர்வாகிகள் ஆகியோர் ஆரவாரங்களுக்கு மத்தியில் அழைத்து வரப்படுவர். இனி காகித ஆலைக்கு நல்ல காலந்தான் என்ற ஊழியர்களின் அங்கலாய்ப்பு கலந்த மகிழ்வு ஒரு சில நாட்களில் மறைந்து விடும்.

"வெள்ளை யானை" என மகுடமிட்டு பத்திரிகைகளில் வெளியான பல கட்டுரைகள் காகித ஆலையின் சோக வரலாற்றினை படம் போட்டுக் காட்டின.

இலங்கையில் இலட்சக்கணக்கான இளைஞர், யுவதிகள் தொழில் வாய்ப்பின்றி வாடும் இவ்வேளையில் கைத்தொழில் பேட்டைகளுக்கு மூடுவிழா நடாத்த நினைப்பது சரியான செயலாகுமா? உலக வங்கியின் தனியார் மயக்கொள்கைக்கு ஆதரவாகச் செயல்படமுனைவதில் தவறில்லையென்றாலும் உள்நாட்டில் ஆண்டாண்டு காலம் பல ஆயிரக்கணக்கான தொழில் வாய்ப்புக்களை உருவாக்கும், இத்தகைய தொழில் பேட்டைகளை மூடுவதன் மூலம், மாகாண, பிராந்திய ரீதியாக வேலையற்றவர்கள் பெருகாது, குறையவா போகின்றனர்.

தேர்தல் காலங்களில் வாக்குறுதிகளை அள்ளிவீசி வெற்றிக்கு வழிதேடும் அரசியல் வாதிகள் உங்கள் தொகுதியின் பிராந்தியத்தின் மாகாணத்தினால் அமைந்துள்ள காகிதாலையைச் சென்று பாருங்கள் அதன் அலங்கோலத்தை பாழடைந்து போய் சுருங்கச் சொல்லின் போரினால் தாக்குண்டதைப் போன்ற அவல நிலையைக்காணலாம். இதன் விடுதிகள் சொல்லும் கதை ஏராளம்.

கைநிறையக் காசு என்ற பெருமையில் வாழ்ந்த ஊழியர்கள் உள்ளங்கையைக்கூட மறைக்காத காசுடன் வேதனையில் வாடுகின்றனர்.சுற்றுலா வருபவர்களின் மனங்களிலே மறக்கவொண்ணா நினைவலைகளை உருவாக்கிக் கொண்டிருந்த இயந்திரங்களின் பேரிரைச்சல்கல் மௌனமாய் உறங்கிக் கொண்டிருக்கும் வேதனையை எழுத்தில் வடிக்க இயலாது.

சுறுசுறுப்பாய் 1800 ஊழியர்கள் ஆடிப்பாடி அலுக்காது பணிபுரிந்துவிட்டு படிப்படியாக சுய விருப்புத்திட்டத்தின் கீழ் ஓய்வு பெற் றுச் செல்ல இன்று 450 ஊழியர்கள் அளவில் பரிதவிக்கும் அவலநிலையைக் காணும் போதெல்லாம் இரத்தக்கண்ணீர்தான் வரும்.

பொதுவாகச் சொல்லப் போனால் காகித ஆலையின் அசையும் அசையாச்சொத்துக்கள் அனைத்தும் மயான அமைதிக்குள் சங்கமமாகிக் கொண்டிருக்கிறது. என்பது தான் உண்மை.

## எங்கள் குரல்

இ. திருநாவுக்கரசு

முன்னாள் காகித ஆலை கணக்கியல் நிறை வேற்று உத்தியோகத்தர்.

# இரண்டாவது டெஸ்டில் நியூசி.வீழ்ந்தது தொடரை வென்றது இங்கிலாந்து

நியூசிலாந்து அணிக்கு எதிரான 2-வது டெஸ்ட் போட்டியில் 9விக்கட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று 2-0என்ற நிலையில் இங்கிலாந்து அணி தொடரை வென்றது. இங்கிலாந்து, நியூசிலா ந்து அணிகளுக்கிடையேயான 3டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரின் 2-வது போட்டி லீட்சில் நடைபெற்றது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற கடைசி நாள் ஆட்டத்தின் போது வெற்றி பெற 45ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் ஒரு விக்கட்டை இழந்து வெற்றி இலக்கை இங்கிலாந்து எட்டியது.



இரு அணிகளுக்கிடையே லார்ட்சில் நடைபெற்ற முதல்டெஸ்டில் 7விக்கட்டுகள் வித்தியாசத்தில் இங்கிலாந்து அணி வென்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் 2-வது டெஸ்ட் போட்டியிலும் வென்றதன் மூலம் இங்கிலாந்து அணி 2-0என்ற நிலையில் தொடரை வென்றது. இதன் மூலம் இருஅணிகளும் கடைசியாக மோதியுள்ள 6டெஸ்ட் போட்டிகளில் 5-இல் இங்கிலாந்து வென்றுள்ளது. இரு அணிகளுக் கிடை யேயான 3-வது டெஸ்ட் போட்டி டிரண்பிரிட்ஜில் நாளை வியாழக்கிழமை தொடங்குகிறது




## தென்கிழக்கு பல்கலை கலை கலாசார அணி உதைபந்தாட்ட சம்பியனாகத் தெரிவு

தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் பீடங்களுக்கிடையிலான உதை பந்தாட்ட சுற்றுப் போட்டியில் கலை கலாசார அணி சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளது. இறுதிப் போட்டியில் வர்த்தக முகாமைத்துவ பீட அணியுடன் மோதிய கலை கலாசார பீட அணி 04-02 என்ற கோல் வித்தியாசத்தில் வெற்றியீட்டியது. கலை கலாசார பீட அணி சார்பாக சமீருல்ஹறக் 2கோல்களையும், சதாக், ராசில், ஆகியோர் தலா ஒரு கோலையும் போட்டனர்.

வர்த்தக முகாமைத்துவ பீட அணி சார்பாக தலைவர் ஏ.எம். பைஷால் இரு கோல்களையும் போட்டார். நடுவராக யூ.எஸ். சபீல் கடமையாற்றியிருந்தார். தென்கிழக்குப் பல்கலைக் கழக விளையாட்டுத்துறைப் போதனாசிரியர் எம். வை.சம்சுல்ஆரிபீன் தலைமையில் மைதானத்தில் போட்டிகள் இடம் பெற்றது.

# ஆரையம்பதி ஏசியன் வி.க.முதலிடத்தில்

மண்முனைப்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவுகு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான பிரதேச விளையாட்டு விழா அண்மையில் ஆரையம்பதி சாண்டோ சங்கரதாஸ் மைதானத்தில் நடைபெற்றது. மண்முனைப் பற்று பிரதேச செயலாளர் க.சிவநாதன் தலைமையில் நடைபெற்ற இவ்விளையாட்டுப் போட்டியில் விளையாட்டுக் கழகங்கள் பங்கேற்ற போதும் 104 அதி கூடிய புள்ளிகளைப் பெற்று ஆரையம்பதி ஏசியன் விளையாட்டுக் கழகம் முதலாம் இடத்தினையும் 64 புள்ளிகளைப் பெற்று ஆரையம்பதி ஆதிவைரவன் விளையாட்டுக் கழகம் இரண்டாம் இடத்தினையும் பெற்றது. கடந்த வருடம் விளையாட்டுப் போட்டிகளில் இருந்து ஏசியன் வி.க. ஒதுங்கியிருந்த போதும் இம் முறை மீண்டும் சிறப்பாக விளையாடியதாகவும் இப் போட்டிகளுக்கு அதிதிகளாக மட்டக்களப்பு உதவி மாவட்ட செயலாளர் திருமதி.ஆர். கேதீஸ்வரன், மட்டக்களப்பு கல்வியற் கல்லூரி பீடாதிபதி சி. பாக்கியராசா, மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் வை.லியாக்கத்அலி, பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் த.யோகானந்தராஜா ஆகியோர்கள் கலந்து சிறப்பித்தனர்.

## மண்முனை பிரதேச மாணவர்களுக்கு இடையில் கிரிகெட் போட்டிகள்

ஆரையம்பதி விளையாட்டுக் கழக ஒன்றியமும், ஆரையம்பதி இராஜதுரை இளைஞர் கழகமும் இணைந்து மண்முனை பற்று பிரதேசத்திற்கு உட்பட்ட பாடசாலை மாணவர்கள், மாணவிகளுக் கான கிரிக்கெட் போட்டிகளுக்கான பயிற்சிகள் வழங்கி பிரதேச மட்டத்திலான போட்டிகளையும் நடாத்த உள்ளதாக தெரிய வருகின்றது. அணிக்கு 11வீரர்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் போட்டி யாக நடைபெறவிருக்கும் இப்போட்டிக்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், எதிர் வரும் வாரங்களில் விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளதாகவும் கழகச் செயலாளர் தெரிவிக்கின்றார்.

## போரதீவுபற்று சிறுவர் கழகங்களுக்கு இடையே விளையாட்டுப் போட்டி

மட்.போரதீவுப் பற்றுப் பிரதேசத்தில் உலக தரிசன நிறுவனத்தினால் சிறுவர்களுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணிக்கு மண்டூர் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. மட்டக்களப்பு மாவட்டத்தின் உலக தரிசன நிறுவனத்தின் திட்டப் பணிப்பாளர் திருச்செல்வம், வெல்லாவெளிப் பொலிஸ் பொறுப்பதிகாரி, கோட்டக்கல்வி அதிகாரி தில்லைநாதன், பழுகாமம் அபிவிருத்திக் குழுத் தலைவர் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

இப்போட்டியில் 13 சிறுவர் கழகங்களில் இருந்து சுமார் 150 மாணவர்கள் கலந்து கொண்டனர். இப் போட்டியில் 72 புள்ளிகளைப் பெற்று களுமுந்தன்வெளி ஸடார் சிறுவர் விளையாட்டுக் கழகம் முதலாமிடத்தையும், 52 புள்ளிகளைப் பெற்று பழுகாமம் சிறுவர் விளையாட்டுக் கழகம் 2ம் இடத்தினையும், 36 புள்ளிகளைப் பெற்று மண்டூர் சிறுவர் கழகம் மூன்றாம் இடத்தினையும் பெற்றது. இங்கு உடற்பயிற்சி கண்காட்சியும் பழுகாமம் சிறுவர் கழகம் ஒழுங்கு செய்து காட்டியிருந்தது. மற்றும் அனைத்து சிறுவர்கழகங்களின் அணிநடையும் இடம் பெற்றது. பின் 3.00 மணியளவில் போட்டி இனிது நிறைவு பெற்றது.



## சிந்தனைக்கு

நாம் யாரையும் ஏமாற்றவும் இல்லை, துரோகம் இழைக்கவும் இல்லை ஆனால், எம்மை யாரும் ஏமாற்றினால் அல்லது துரோகம் இழைத்தால் நாம் பதிலடி கொடுக்கத் தயங்கமாட்டோம்.

தமிழீழத் தேசியத் தலைவர்

ஈழநாதம்
மக்கள் தினசரி — மட்டக்களப்பு பதிப்பு
பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை.
தொலைபேசி:- 065-2226110
065-2226303
batti@eezhanatham.com
09.06.2004

## சிறிலங்கா நாடாளுமன்றம் இப்போது அடிதடி சண்டைக் களமாக மாறியிருக்கிறது.

நாட்டில் மக்களால் தெரிவுசெய்யப்பட்டு மாலைபோட்டு வரவேற்று ஊர்உலா வந்தபிரமுகர்கள் ஒன்று கூடும் நாடாளுமன்றம் அதன் ஜனநாயகத்தன்மையை மீறி அடிதடி சண்டைக்களமாக மாறியிருக்கிறது.

இதன்காரணமாக இந்தநாட்டில் ஆட்சியாளர்கள் யார் மக்கள் பிரதிநிதிகள்யார் என்ற கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

நேற்று நாடாளுமன்றத்தில் சிங்களக்கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கோபாவேசத் தன்மையுடனான கைகலப்பு கலாட்டாவை தொலைக்காட்சி ஊடகங்களில் கண்டவர்கள் திகைத்திருப்பார்கள்.

தேர்தலில் ஏன் போட்டியிடுகிறோம் யாருக்கு சேவைசெய்யப் போகிறோம் யார் வெற்றி பெறுவதற்கு வாக்களித்தார்கள் என்பதையெல்லாம் மறந்து அடித்துப் புரண்டு எழும்புவது எதிர்காலத்தில் இவர்களா நாட்டைப் பரிபாலனம் செய்யப்போகிறவர்கள் என்ற கேள்வியையும் எழுப்புகிறது.

இவைஒரு புறமிருக்க தமிழர் தேசிய உரிமைக்கு இந்த அடிதடிரகளை செய்யும் சண்டியர்களா உரிமையை விட்டுக்கொடுக்கப் போகிறார்கள் என்ற சிந்தனை தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் எழுந்துள்ளது. ஒருநாட்டில் இறையாண்மை கொண்ட நாளுமன்றம் இதுவரை காலமுமில்லாதவாறு நேற்றய கூட்டத் தொடரில் நடந்துள்ள கைகலப்பில் இருநாடாளுமன்ற உறுப்பினர்கள் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளதுடன் நாடாளுமன்றத்தினை தலைமைவகிக்கும் சபாநாயகர் தமது ஆணையால் ,அதிகாரத்தால் கட்டுப்படுத்த முடியாதநிலையும் ஏற்பட்டுள்ளது.

இவற்றைவிட நாடாளுமன்றத்தின் செங்கோலைத் தூக்கி ஒழிக்கும் அளவிற்கு நிலமை மோசமடைந்துள்ளதென்பதை நினைக்கும் போது வெட்கித் தலைகுனிய வேண்டியசெயல்

தேர்தல் காலத்தில் மட்டும் சமூகத்தின் மத்தியில் வெள்ளை வேட்டியும் கோட்டும் போட்டுக்கொண்டு கை எடுத்துக்கும்பிட்டு வாக்களியுங்கள் என வார்த்தைஜாலம் காட்டி வென்று சிம்மாசனங்களில் உட்கார்ந்தபின் சமூகத்திற்கு கொடுத்த வாக்குறுதிகளை மறந்து செயற்படுபவர்கள்தான் அரசியல்வாதிகள் என்ற எண்ணத்திற்கு ஒருபடி மேலாக இப்போது கலாட்டா கும்பலாகதமது உணர்வுகளை வெளிக்காட்டியிருப்பது சிங்கள மக்கள் மத்தியில் ஒரு நாடாளுமன்ற பிரதிநிதிக்கு இருந்த நம்பிகையை குறைத்திருக்கும். எதிர்காலத்தில் இவர்கள்எப்படி நடந்துகொள்வார்கள் என்பதிலும் இருந்த நிலையைவிட இன்னும் மிக மோசமாக செயற்படுவார்களா? அல்லது இனிமேல் இவ்வாறு செய்யக்கூடாது எனத் திருந்தி நடப்பார்களா?எது எப்படியாயினும் சிறிலங்காவின் நாடாளுமன்றத்தில் இதுபோன்றதொரு கலாட்டா வன்முறை எதிர்காலத்தில் நிகழக்கூடாது. அவ்வாறான சம்பவங்கள் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியவை.

தமிழ்மக்களின் உரிமைகளை வழங்குவதில் இழுத்தடிப்புக்களைச் செய்துவரும் சிங்கள ஆட்சியாளர்களின் சட்டங்கள் நிறைவேற்றப் படவேண்டிய நாடாளுமன்றத்தில் தமிழர் தரப்புக்கு சாதகமாகச் சட்டங்கள் நிறைவேற்ற இந்தச் சண்டியர் பட்டாளம் மௌனித்திருக்குமா? என்பது கேள்விக்குறி.

# உல்லைப் பகுதிக்கு உல்லாசப் பயணிகள் அதிகரிப்பு, சூழல் மாசடையும் அபாயம்

(வி.பி.சிவப்பிரகாசம்)

நாட்டில் ஏற்பட்டிருக்கும் அமைதியான சூழ்நிலையைத் தொடர்ந்து தினசரி உள்நாட்டு, வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் பொத்துவில், உல்லைக் கடற்கரைப் பகுதியில் வழிந்து கொண்டே இருக்கிறார்கள். இதனால் கடற்கரைப் பிரதேச சூழல்கள் மாசடைவதுடன் கலாசாரமும் சீரழியத் தொடங்கியுள்ளதாக பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கிறார்கள்.

தினசரி 50க்கு மேற்பட்ட வாகனங்களில் பெருந்தொகையானவர்கள் வருகிறார்கள். ஒரு நாள் அல்லது இரு நாள் தங்கிச் செல்கிறார்கள். இதனால் உல்லப் பிரதேசத்திலுள்ள சிறு விடுதிகள் கூட நிரம்பி வழிகிறது. உள்ளூர் வாசிகள் கடற்கரை ஓரங்களில் சிறு குடிசைகள் மைத்து உல்லாசப் பயணிகளுக்கு வாடகைக்கு விட்டு வருமானத்தைய் பெற்றுக் கொள்கிறார்கள்.இதே நேரத்தில் கடற்கரைப் பிரதேசத்தில் சுற்றாடல் முழுமையாக மாசடைகிறது என்று ஆழ்கடல் மீனவர்கள் தெரிவிகின்றார்கள்.

இதே நேரத்தில் பொத்துவில் பகுதியில் எல்லாப் பொருட்களின் விலை வாசி அதிகரித்துள்ளதாக உள்ளூர் வாசிகள் தெரிவிக்கிறார்கள். கடலில் நீந்தி விளையாடுவதற்குப் பெயர் பெற்ற இடமான உல்லை கடற்பகுதியில் முன்பு எல்லாம் வெளிநாட்டவர்கள் தான் அதிகமாக ஈடுபடுவார்கள் இப்போது அந்த இடத்தை உள்நாட்டவர்கள் அதிகமாக ஈடுபடுவதைக் காணக் கூடியதாக இருக்கிறது.

இதே நேரத்தில் பொத்துவில் பிரதேசத்தில் உல்லாசப் பிரயாணிகளுக்குப் போதுமான வசதிகளோ, பாதுகாப்பு வசதிகளோ இல்லை. என்று அவர்கள் குறை தெரிவிக்கிறார்கள். இதற்குப் பொருத்தமான நடவடிக்கை மேற்கொள்வதற்குப் பொத்துவில் பிரதேச சபை முன்வர வேண்டும்.

தற்போது பொத்துவில் பகுதியிலுள்ள தனியார் உல்லாச விடுதிகளின் கட்டணங்கள் அதிகமாக இருக்கிறது என்று உல்லாசப் பிரயாணச சபை இந்த விடுதிகளின் கட்டணங்களை மட்டுப்படுத்த வேண்டும் அத்துடன் சபையினால் விடுதிகள் அமைக்கப்பட வேண்டுமென்று உல்லாசப் பயணிள் தெரிவிக்கிறார்கள்.

இதே நேரத்தில் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் பொத்துவில் பிரதேசத்தில் வீடுகளை ஒரு மாத காலத்திற்கு வாடகைக்கு எடுத்து தங்கிச் செல்வதையும் ஆய்வு வேலைகளில் ஈடுபடுவதையும் அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.

## அக்கரைப்பற்று கல்வி வலயத்தில் தரம் 6க்கு இதுவரை பாட நூலில்லை

(நமது நிருபர்)

அக்கரைப்பற்று கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளுக்கு தரம்6 ற்குரிய இலவச பாடப்புத்தகங்கள் இதுவரை வழங்கப்படவில்லையென வலயக் கல்விப்பணிப்பாளர் யூ.எல்.எம்.காசீம் தெரிவித்தார்.

திருக்கோயில் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளுக்கு 6ம் தரத்திற்கான ஆங்கிலப் பாடப்புத்தகங்களும், அக்கரைப்பற்று கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளுக்கு 6ம் ஆண்டுக்கான தமிழ் பாடப்புத்தகங்களும் கிடைக்கப்பெறவில்லையென தெரிவித்த அவர் இதே போன்று ஆலையடி வேம்பு பொத்துவில், அட்டாளைச் சேனை ஆகிய கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த பாடசாலைகளுக்கும் பூரணமாக வழங்கப்படவில்லை யெனவும் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக கல்வித் திணைக்களத்திடம் கேட்ட போது புத்தகங்கள் அச்சிடப்படாத நிலையிலுள்ளதால் இந்தத் தாமதம் ஏற்பட்டுள்ளதாக கல்வித் திணைக்களம் தமக் அறிவித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மட், மாவட்ட விவசாயிகளுக்கு இரு நாள் பயிற்சி செயலமர்வு

(கர்சனன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் விவசாயச் செய்கையை மேம்படுத்தும் வகையில் விவசாயிகளுக்கான பயிற்சிப் பட்டறை கடந்த இரு நாட்களும் மட்டக்களப்பு சத்துருக் கொண்டான் மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது.

இச் செயலமர்வில் சகல பிரதேசங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட 30 விவசாயிகள் கலந்து கொண்டனர்.

# மட்/தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் முறாவோடையில் 100 வீட்டுத்திட்டம்

(ரமேஸ்)

மட்டக்களப்பு தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையுடன் நெக்கோட் நிறுவனம் இணைந்து முறாவோடையில் நூறு வீடுகளை அமைப்பதற்கான திட்டத்தினை ஆரம்பித்துள்ளது.

இதற்கான அடிக்கல் நாட்டு விழாஇன்று புதன்கிழமை காலை 11 மணிக்கு திட்ட இணைப்பாளர் மா.சதாசிவம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கோறளைப்பற்றுபிரதேச செயலாளர் திருமதி கே.பத்மராஜா மற்றும் மட், மாவட்ட அரச அதிபர் எஸ்.புண்ணியமூர்த்தி, தமிழர் புனர்வாழ்வுக் கழகப்பணிப்பாளர் கு.தேவராஜா. மட், மாவட்ட நெக் கொட் திட்டப் பணிப்பாளர் சிவானந்த ராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். ஒரு வீட்டின் பெறுமதியானதும் 85000 ரூபா வாகும் ஒவ்வொரு வீடும் மக்களின் பங்கேற்புடன் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மட்/திருமறைக் கலாமன்றத்தால் கலைத்தூது பயிற்சி நெறி!

(எம்.யுவராஜ்)

மட்டக்களப்பு திருமறைக் கலாமன்றத்தினால் ''கலைத்தூதுகவின் கலைக்கூடம் எனும் நடன இசைப் பயிற்சி நெறி மட்டக்களப்பு கத்தோலிக்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி நெறியில் கலந்து கொள்ளவிரும்பும் மாணவர்கள் மட்டக்களப்பு திருமறைக் கலாமன்றத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

இப்பயிற்சிநெறியில் விசேட அம்சமாக மட்டக்களப்புபாரம்பரிய கூத்துக் கலைசம்மந்தமாகப் பயிற்றுவிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கலைகளின் மூலமாக பாரம்பரிய கலை வடிவங்களைப் பேணிப் பாதுகாப்பதிலும், கலைஞர்களை உருவாக்குவதிலும் மட்டக்களப்பு திருமறைக் கலாமன்றம் பெரும்பங்காற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



அக்கரைப்பற்று கோளாவில் சித்தி விநாயகர் வித்தியாலய மண்டபத்தில் மீன்பிடி அமைச்சினால் யீனவர்களுக்கு 16 தோணிகள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் அதிதியாகக் கலந்து கொண்ட தமிழீழ விடுதலைப்புலிகளின் மட்டு அம்பாறை கடல்வளப் பொறுப்பாளர் சக்தி உரையாற்றுவதையும், அம்பாறை மாவட்ட மீன் பிடிப் பணிப்பாளர் ஜோர்ஜ், அம்பாறை தமிழ் மீன் பிடிச் சங்கங்களின் சமாஜத் தலைவர் இ.துரைராஜா அருகில் இருப்பதையும் மீனவர்களுக்குத் தோணிகள் கையளிப்பதையும் படத்தில் காணலாம். படமும் தகவலும்:- சரவணன்.

ஈழநாதம்
மட்டக்களப்பு பதிப்பு மக்கள் நாளிதழ்
Eezhanatham

## மட்.மாவட்டத்தில்

# மீள்குடியேறிய கிராம இளைஞர்களுக்கு நாளை பயிற்சிச் செயலமர்வு

(எஸ்.நிலாந்தன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெயர்ந்து மீள் குடியேறிய கிராமங்களைச் சேர்ந்த இளைஞர்களுக்கான செயலமர்வு நாளை வியாழக்கிழமை மட்டக்களப்பு சாள்ஸ் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் இடம் பெயர்ந்த மக்களின் செயற்பாட்டுக் குழு ஒருங்கிணைப்பாளர் சேனக்க திஸ்ஸநாயக்க கலந்துகொள்ளவுள்ளார். இச் செயலமர்வில் மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வுகளை மேற்படி கிராமங்களுக்கு கொண்டு சென்று மக்களுக்கு மனித உரிமைகள் பற்றி கற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

# சுகாதார பணியாளர் போராட்டம் கைவிடப்பட்டது

(சி.பி.ஹரிச்சந்திரன்)

சுகாதார அமைச்சரின் உறுதிமொழியை அடுத்து இன்று நாடுபூராகவும் சுகயீன விடுமுறையில் பணிப்புறக்கணிப்பு செய்யவிருந்த சுகாதார சேவை பணியாளர்கள் தமது போராட்டத்தை இரத்து செய்துள்ளனர்.

நேற்று மாலை ஸ்ரீலங்கா குடியரசு சுகாதார சேவைகள் சங்க பிரதிநிதிகளும் சுகாதார அமைச்சருக்குமிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையை அடுத்து வடக்கு கிழக்கு மாகாண சுகாதார சேவையாளர்களுக்கும் சம்பள முரண்பாட்டை நீக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக சுகாதார அமைச்சர் அளித்த உறுதிமொழியை அடுத்து இன்றும் நாளையும் நடைபெறவிருந்த போராட்டம் கைவிடப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட கிளைத் தலைவர் அ.மரியசீலன் ஈழநாதம் மட்டக்களப்பு பதிப்பிற்கு தெரி வித்தார்.

# ஆறுமுகம் தொண்டமானின் பாதுகாப்பு குறைப்பு

(நமது நிருபர்)

இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவர் ஆறுமுகம் தொண்டமானின் பாதுகாப்பு நேற்று முதல் குறைக்கப்பட்டுள்ளது.

இவரது பாதுகாப்புக்கு தற்போது, இரு பொலிசார் மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளனர். சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான அரசுடன் இ.தொ.கா. இணைய மாட்டாதென கட்சி எடுத்த முடிவையடுத்தே, இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது.

---

**ஏறாவூர்...**

இணைவதற்கு சம்மதம் இல்லையென திட்டவட்டமாக தெரிவித்த போதிலும் முகவர்கள் தொடர்ந்தும் தொல்லை கொடுப்பதால் வர்த்தக நிலைய உரிமையாளர்கள் தலைமறைவாகியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அரசாங்க ஊழியர்களான காப்புறுதி முகவர்கள் தமது முழுநேர கடமையினைவிட்டு பகுதிநேர தொழிலான காப்புறுதி நிறுவன முகவர் கடமையில் கரிசனை காட்டுவதாக அறியவருகிறது.

---

**மட்.பட்டிபளையில்...**

உலக சமுதாயத்திற்கு முன்னுதாரணமான முறையில் நல்லதொரு சமுதாயத்தை உரு வாக்க வேண்டுமென எமது தேசியத் தலைமை அக்கறை கொண்டு மீண்டும் இது ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனவே ஏற்கனவே இந்நீதிமன்றில் தாக்கல் செய்திருந்த வழக்குகளை மீள ஆரம்பிப்பது தொடர்பில் உரியவர்கள் நீதிமன்றப் பதிவாளருடன் தொடர்பு கொள்ளுமாறு மட்டு. அம்பாறை தமிழீழ நீதிநிர்வாகப் பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

---

**நிமலராஜனி...**

ளின் முக்கிய உறுப்பினர் கா.வே. பாலக்குமாரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு ஆயித்தியமலையில் தேசத்துரோகிகளின் கண்மூடித்தனமான படுகொலை நடவடிக்கையொன்றில் வீரச்சாவடைந்த கப்டன் ஸாமக்காந்தின் நினைவு நிகழ்வு நேற்று புதுக்குடியிருப்பு ஸ்ரீ சுப்ரமணிய வித்தியாலயத்தில் நடைபெற்றது. அந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவ்வாறு ஆரம்பிக்கப்படும் போது அதில் மூத்த பத்திரிகையாளர்களாக விளங்கும் அறிவாளர்களை வைத்து கற்பித்தல் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

---

**இந்திய...**

சாங்கத்துக்கும் படையினருக்கும் தைரியம் அதிகரிக்குமேயன்றி தமிழ் மக்களுக்கு எந்தவித பயனும் கிடைக்கப் போவதில்லையென அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கை இனப்பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு காணும விடயத்தில் இந்தியா முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டுமென தமிழ் மக்கள் மிகுந்த ஆர்வத்தோடு இருக்கின்றார்கள். இன்நிலையில் இந்த ஒப்பந்தம் செய்ய ப்படுவதன் மூலம், தமிழ் மக்கள் பெரும் ஏமாற்றத்தை எதிர் கொள்வரெனவும், பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கூறினார்.

எனவே, இந்த உடன்படிக்கையை மீள்பரிசீலனை செய்து அதனை இந்திய அரசு கைவிட முன்வர வேண்டுமென அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

# நாடாளுமன்ற அமளிது மளியில் இருஹெறல உறுமய எம்.பிக்கள் காயம்

(நமது நிருபர்)

நாடாளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சி உறுப்பினருக்கும் ஆளும் கட்சி உறுப்பினர்களுக்குமிடையே ஏற்பட்ட கைகலப்பில் ஜாதிக ஹெல உறுமய பாராளுமன்ற உறுப்பினர் இருவர் காயமடைந்து ஜயவர்த்தனபுர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் அக்மீமன தயாரெட்ண தேரர், உடுவல தம்மாலோக தேரர் ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர்.

ஜாதிகஹெல உறுமயவின் சார்பில் புதிய பாராளுமன்ற உறுப்பினர் அக்மீமன தயாரெட்ண தேரர் சத்தியப் பிரமாணம் செய்ய முற்பட் போது ஆளும் தரப்பிலிருந்து அமைச்சர் ஜெயராஜ் பெனாண்டோப்புள்ளே எதிர்ப்புத் தெரிவித்த வேளையிலேயே இக்கலவரம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# புதிய அரசியல் கட்சி ஒன்றை நிறுவுவதில் முன்னாள் எம்.பி மயோன் முஸ்தபா முனைப்பு!

(ஏறாவூர் நிருபர்)

வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் உரிமைகளுக்காகப் போராடுவதையே தமது நோக்கமாகக் கூறி வாக்குகளைப் பெற்றவர்கள்.

அதிகாரத்திற்கு வந்தவுடன் கடைப்பிடித்த சர்வாதிகாரம் மற்றும் சுயநலப் போக்குகளே முஸ்லிம் சமூகத்தின் அபிலாசைகளை வென்றெடுப்பதற்கு தடைக்கற்களாய் அமைந்ததாக ஐக்கிய தேசிய கட்சியின் செயற்குழு உறுப்பினரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மையோன் முஸ்தபா தெரிவித்தார்.

இதேவேளை தாம் ஏமாற்றப்பட்டு விட்டோம் என்பதை நன்கு அறிந்து கொண்ட பின்னரும் கூடவேறு வழியில்லாத நிலையில் வடக்கு கிழக்கு மாகாண முஸ்லிம்கள் தம்மை ஏமாற்றிய அமைப்பிற்கே தொடர்ந்தும் ஆதரவை வழங்க வேண்டியதொரு நிர்ப்பந்தமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளமை துர்ப்பாக்கியமானது என்றும் மையோன் முஸ்தபா மேலும் கூறினார்.

''வடக்கு கிழக்கு மாகாண முஸ்லிம்களின் எதிர்காலமும், புதிய அரசியல் கட்சியின் தேவையும்'' என்ற தொனிப்பொருளில் கல்முனை ம.'.மூத் பாலிகா மகளிர் கல்லூரியில் பொறியியலாளர் எம்.ஐ.எம். லத்தீர் தலைமையில் நடைபெற்ற புத்திஜீவிகள் மாநாட்டில் உரையாற்றுகையிலேயே மையோன் முஸ்தபா இக்கருத்துக்களைத் தெரிவித்தார்.

தேசிய கட்சிகளைச் சார்ந்த பிரதிநிதிகள் மூலம் சமூகத்தின் அபிலாசைகளை வென்றெடுப்பது சாத்தியமற்றதென்பதை தீர்க்கமாக உணர்ந்த வடக்கு கிழக்கு மாகாண முஸ்லிம்கள் கடந்த சுமார் பதினேழு வருடங்களுக்கு முன்னர் தனித்துவமான அரசியல் அமைப்பொன்றை உருவாக்குவதில் முனைப்புடன் செயற்பட்டு ஈற்றில் வெற்றியும் கண்டனர். ஆனால் தனித்துவமான அரசியல் கட்சியொன்றை அமைப்பதில் வெற்றிகண்ட அளவுக்கு அவ்வமைப்பினூடாக தமது குறிக்கோளை அடைவதில் வெற்றியடைய முடியாமலாகிவிட்டது. இது ஒரு கசப்பான வரலாற்று உண்மையாகுமென மையோன் முஸ்தபா குறிப்பிட்டுள்ளார்.

---

**நாடாளுமன்றத்தில்...**

லாக அக்மீமன தயாரத்ன தேரரை பாராளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்துகொள்ளும்படி சபாநாயகர் அழைப்பு விடுத்தார். அப்போது அமைச்சர் ஜெயராஜ் பெர்ணான்டோ புள்ளே நீதிமன்றத்தினால் தடையுத்தரவு ஒன்று பிறப்பிக்கப்பட்டிருப்பதனால் தேரர் பதவிப் பிரமாணம் செய்ய முடியாதென ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பினார். இதனால் பாராளுமன்றத்தில் அமளி - துமளி ஏற்பட்டது. தயாரத்ன தேரர் சத்தியப்பிரமாணம் செய்வதற்கு அரசாங்கத் தரப்பு உறுப்பினர்கள் பலத்த எதிர்ப்பை தெரிவித்தனர். தமக்கு அவ்வாறான நீதிமன்ற தடையுத்தரவு எதுவும் கிடைக்க வில்லையென சபாநாயகர் தெரிவித்தார்.

எதிர்ப்புக்களுக்கு மத்தியில் தயாரத்ன தேரர் சத்திய ப்பிரமாணம் செய்ய முற்படும்போது, அரசாங்கத் தரப்பு உறுப்பினர்கள் ஆசனங்களிலிருந்து எழுந்து, சபை மத்திக்கு வந்து தயாரத்ன தேரரை சூழ்ந்து கொண்டனர். இந்த சந்தர்ப்பத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்களும் ஆசனங்களிலிருந்து எழுந்து, சபை மத்திக்கு வந்தனர். இதனால் சபையில் உறுப்பினர்களுக்கு இடையே இழுபறி ஏற்பட்டதுடன் அங்கு மோதல் ஏற்படும் நிலையும் காணப்பட்டது.

இந்தக் குழப்பத்திற்கு மத்தியில் செங்கோலை, யாரோ எடுத்துச் சென்று மறைத்துள்ளனர். செங்கோலை உரிய இடத்தில் வைக்குமாறு சபாநாயகர் பல முறை வேண்டுகோள் விடுத்த போதும், எவரும் அதனை நிறைவேற்றவில்லை. எனினும், செங்கோல் இல்லாமலேயே அக்மீமன தேரர் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு உறுப்பினர்களான நிர்மல கொத்தலாவல மற்றும் எச்.ஆர்.மித்திரபால இருவரையும் சத்தியப்பிரமாணம் செய்துகொள்ளுமாறு சபாநாயகர் அழைப்பு விடுத்தார். சத்தியப்பிரமாணம் செய்ய அவர்கள் வரவில்லை. அமளி - துமளியை அடுத்து பாராளுமன்றத்தை 15 நிமிடங்களுக்கு ஒத்திவைப்பதாக சபாநாயகர் அறிவித்தார்.

---

**ஆளும்...**

கட்சியின் உறுப்பினர் அக்மீமன தயாரத்ன தேரரும், கொலன்னாவ சுமங்கல தேரரும் ஆளும் தரப்பினரால் தாக்குதலுக்கு இலக்காகியதையடுத்து எதிர்ப்பு தெரிவித்தே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக உடுவே தம்மாலோக்க தேரர் தெரிவித்தார்.

தமது கட்சி உறுப்பினர்கள் இருவர் தாக்கப்பட்டமைக்கு பலர் காரணமாக இருந்தார்கள் என்று அவர் சுட்டிக்காட்டினார். அவர்களில் அமைச்சர்களான ஜெயராஜ் பெர்ணான்டோ புள்ளேயும், ஜீவன் குமாரதுங்கவும் முக்கிய இடம்பெற்றதாக அவர் கூறினார். தேர்தல் காலம் முதல் இன்றுவரை ஹெல உறுமயக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான தேரர்களுக்கு களங்கமும், அபகீர்த்தியும் ஏற்படுத்தும் வகையிலேயே அரசாங்கம் செயற்பட்டு வந்துள்ளது. இது கவலைக்குரிய விடயமென்று உடுவே தம்மாலோக்க தேரர் மேலும் கூறினார்.

நாட்டில் பல்வேறு பிரச்சினைகள் புரையோடிப் போயுள்ள நிலையில் அவற்றை தீர்க்காமல் ஜாதிக ஹெல உறுமய கட்சியின் மீது, களங்கம் ஏற்படுத்தும் வகையில் அரசாங்கம் செயற்படுவது பெரும் கவலையைத் தருவதாக எல்லாவெல மேதானந்த தேரர் கூறினார். தொழில், சுகாதாரம், சம்பளப் பிணக்குகள், வடக்கு - கிழக்கு பயங்கரவாதம், வாழ்க்கைச் செலவு ஆகிய பிரச்சினைகளை தீர்ப்பதனை விடுத்து, தமது கட்சியை அரசாங்கம் இல்லாதொழிக்க முற்படுவதாக தேரர் மேலும் கூறினார். நேற்று பாராளுமன்றத்திற்குள் பயங்கரவாதம் புகுந்து விட்டதென்றும், அதன் மூலம் பயங்கரவாத பாராளுமன்றம் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குற்றம்சாட்டினார்.

---

**நாடாளுமன்ற...**

ளுமன்ற உறுப்பினராக சத்தியப் பிரமாணம் செய்ய முனைந்த வேளையில் சபையில் அமளி - துமளி ஏற்பட்டது. இந்த சமயத்தில் சபையின் செங்கோல் ஒருவரினால் மறைத்து வைக்கப்பட்டது.

இதனையடுத்து செங்கோல் இல்லாமலேயே தேரர் சத்தியப் பிரமாணம் செய்ததாக பாராளுமன்ற செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

இதன் பின்னர் சபை நடவடிக்கைகளை சபாநாயகர் 15 நிமிடத்துக்கு ஒத்திவைத்தார். இது குறித்து ஆராயும் முகமாக கட்சித் தலைவர்களின் கூட்டம் சபாநாயகர் டபிள்யு.ஜே.எம்.லொக்குபண்டார தலைமையில் நடைபெற்றது. நேற்று காலை 10.45 மணியளவில் காணாமல் போன செங்கோல் பிற்பகல் 2:20 மணியளவில் அரச தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் அமர்ந்திருந்த பகுதியூடாக சபைக்கு, கொண்டு வரப்பட்டதாக பாராளுமன்ற செய்தியாளர் கூறுகின்றார்.

இதனையடுத்து சபை கூடியது. இந்த வேளையில் சபையின் முதல்வர் மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் ஜூலை மாதம் 20 ஆம் திகதி வரை, சபை நடவடிக்கைகளை ஒத்திவைக்குமாறு சபாநாயகரைக் கேட்டுக்கொண்டார். இதற்கமைய சபை நடவடிக்கைகள் எதிர்வரும் ஜூலை மாதம் 20 ஆம் திகதி காலை 10 மணி வரை ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

---

**கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்**

முருகைக்கற்பாறைத் தொடர்கள் உலகில் 109 நாடுகளைச் சூழ தடுப்பு அரண்களாக விளங்குகின்றன. இவை கடல் அலைகள், புயற்கொந்தளிப்புக்களைத் தாங்கி கரையோரம் வாழ் மக்களுக்குப் பாதுகாப்பளிக்கின்றன.

[illegible] 09. 06. 2004 அன்று [illegible]